O.R. No. 83/65
P 1/2

மேழிச்செல்வம்

MADRAS RECORD OFFICE
9 - APR 1965
MADRAS

ரோதி ௵

தை ௴

25
காசு

மேழிச் செல்வம்

வெளியிடுபவர் :

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளா

சென்னை-5.

அட்டைப் பட விளக்கம்

விரைவில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் பயன்படும் 'பவர் டிரில்'.

வருடாந்தர சந்தா	ரூ.	3·00
தனிப் பிரதி	ரூ.	0·25
ஆண்டு மலர்	ரூ.	0·50

உள்ளுறை

	பக்கம்
வீட்டுக் காய்கறி தோட்டம்	2
கிராம வானொலி மன்றம்	5
கோகோ விதைகளை பதனிடும் முறை ..	6
தென்னந் தோப்புப் பராமரிப்பு ..	7
மிளகாய் சாகுபடி	8
சிறு தானியங்களுக்கு இரசாயன உரமிடல்	12
தஞ்சைக்கு வடிமுனைக் குழாய்க் கிணறுகள்	13
மறுதாம்புச் சோளம்	14
புதிய ரக கருங்கண்ணிப் பருத்தி—கே. 7.	16
மாசிப் பட்ட பருத்தியை தாக்கும் பூச்சிகளைத் தடுத்து அதிக லாபம் பெறவும்.	17
ஏன் முடியாது	20
கன்று பிறந்தபின் உறுப்பு வெளித் தள்ளாமல் தேங்கிய நிலைமை.	22
மண் பரிசோதனை	24
1964-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை.	26
1965-ம் ஆண்டு ஜனவரி மாத வர்த்தகப் பயிர்களின் விற்பனை நிலைமை விவரம்.	28

விளம்பரங்கள் :

துணிகளில் ஆராய்ச்சி	4
அமெரிக்கன் ஸ்பிரிங்கு அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்), லிமிடெட்	11, 19, 29
பாக்டம்பாஸ்	15
ராலீஸ் இந்தியா லிட்	16
ராஜா பண்ணைத் தோட்டம் ...	17
வாட்டர் டிவைனர்	21
மகிழ்ச்சியான வைபவங்களை மேலும் ஆனந்தமாக்குங்கள்.	23

நெசவாளர் சேவா நிலையங்கள்
இந்திய கைத்தறித் தொழிலுக்கு சேவை புரிகின்றன



துணிகளில் ஆராய்ச்சி

**நெசவாளர்
சேவா
நிலையம்**
சென்னை
(காஞ்சீபுரத்தில் உப நிலையத்துடன்)
20, ஆலிவர் ரோடு, மைலாப்பூர்,
சென்னை-4.

காலத்திற்கேற்ற விருப்பபபடி டிசைன்கள் மற்றும் மோஸ்தர்களில் மிகுதியான ஆராய்ச்சியும், பாரம்பரியமான உயர்ந்த டிசைன்களை மீண்டும் வர்ணிப்பதும், நெசவாளர் சேவா நிலையங்களின் செயலாகும்.

டிசைன், சாயமிடுவது, நெய்வது மற்றும் லைப்ரரி பிரிவுகள் தனியாக உள்ள, நவீன தொழில் நுணுக்க சோதகசாலைகளில், திறமைவாய்ந்த நபர்கள் தீவிரமாக ஆராய்ச்சி செய்து, உயர்ந்த, வண்ணத்துடன் கூடிய, பிரபல மோஸ்தர்களை படைக்கின்றனர்.

இந்த ஆராய்ச்சி அனுபவமும், தொழில் நுணுக்க அனுபவமும், நெசவாளர் கூட்டுறவுகளுக்கு, இலவசமாக கிடைக்கும்.

நெசவாளர் கூட்டுறவுகள், இந்த விஷயத்தில் எந்த உதவிக்கும் நெசவாளர் சேவா நிலயத்தை அணுகவும்.

அகில இந்தியக் கைத்தறி போர்டு

DA 64/366

69675
JL
J.211m, N64
N65.22

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மலர் 22	குரோதிஹு தைமீ—1965—ஜனவரி–பிப்ரவரி	இதழ் 1

கிராம வானொலி மன்றம்

கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகி வருவது உங்களுக்குத் தெரிந்ததே. தனிப்பட்ட முறையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சிகளில் எல்லா அரசாங்க இலாகாக்களும் பங்கெடுத்துக் கொள்கின்றன. தற்பொழுது விவசாய இலாகாவிற்கு இதில் முக்கிய பங்கு அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கால் ஆண்டுக்கும் மொத்தம் 26 கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் உள்ளன. சமீப காலம்வரை இதில் 5 நிகழ்ச்சிகளே விவசாய சம்பந்தமானதாக இருந்தன. தற்பொழுது இதில் பாதி நிகழ்ச்சிகளும், அதாவது 13 நிகழ்ச்சிகளும், விவசாய இலாகாவிற்கே ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமாகும். இதன்படி ஏப்ரல் 65–லிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கிராம வானொலி மன்றத்தில் விவசாய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்டு வரலாம். ஆகையால் வெள்ளிக்கிழமையை நீங்கள் விவசாய நிகழ்ச்சிகள் கேட்பதற்கென்றே ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாலை 6–40-லிருந்து 7 மணி வரை கேள்வி—பதில் ஒலிபரப்பாகிறது. முந்திய வாரம் வானொலி மன்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பான விஷயங் குறித்து வெவ்வேறு மன்றங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படுகிறது. பின் 7 மணியிலிருந்து 7–15 வரை உள்ள பேச்சு நிகழ்ச்சியில் விவசாய சம்பந்தமாக வெவ்வேறு விவசாயப் பிரிவுகளிலுள்ள நிபுணர்களும் வல்லுநர்களும் பங்கு கொள்கின்றனர். விவசாயிகளுக்கு அந்தந்த காலத்திற்கு ஏற்றதும் அவ்வப்பொழுது வெளியாகும் பயன்தரும் விஞ்ஞான விவசாய ஆராய்ச்சி முடிவுகளும், இந்த நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகின்றன. உங்களுக்கென்றே ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சிகளை நீங்கள் அனைவரும் தவறாது கேட்டு பயனடைய வேண்டும்.

தமிழ்நாட்டில் 12,500-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில் சமூக வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன. கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகும் விஷயங்கள் குறித்து உங்களுக்கு எழும் சந்தேகங்களை உங்கள் மன்றம் மூலம் திருச்சி வானொலி நிலையத்திற்கு அனுப்புங்கள். இவைகளுக்கு விவசாய இலாகா அளிக்கும் பதில்களை அடுத்த நிகழ்ச்சியில் கேட்டு தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அதில் கூறப்படும் நவீன விவசாய முறைகளையும் நீங்கள் நடைமுறையில் கையாண்டு எவ்வளவு பலனடைகிறீர்கள் என்று பாருங்கள்! இப்படி நீங்கள் விவசாயத்தில் காணும் வெற்றிகரமான அனுபவங்களை விவசாய நெறியாளருக்கு தெரிவியுங்கள். விவசாய நெறியாளரின் அலுவலகத்தில் வானொலி மன்ற நிகழ்ச்சிகளுக்கென்றே பிரத்தியேகமாக உள்ள வானொலி விவசாய அலுவலர் தமிழ்நாட்டிலுள்ள வானொலி மன்றங்களுக்கு சென்று உதவி புரிந்து வருகிறார். உங்களது சிறந்த விவசாய அனுபவங்களை அவருக்குத் தெரிவித்தால் அவர் உங்களை பேட்டி கண்டு ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்ப ஏற்பாடு செய்வார். இதன்மூலம் உங்களைப் போன்ற இதர விவசாயிகளும் உங்கள் அனுபவங்களை கேட்டு பயனடைய ஏதுவாகிறது.

எனவே, நீங்கள் அனைவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், உங்களுக்கென ஒலிபரப்பாகும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியை தவறாது கேட்டு, அதுபற்றி விவாதித்து தீர்மானித்த முடிவுகளை செயல் முறையில் கையாண்டு முழுப்பயனடையவேண்டும். கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியின் வெற்றி உங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்கள் இதில் போதிய ஆர்வம் காட்டி உற்சாகத்துடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும். உங்கள் வெற்றி, விவசாய வெற்றி! விவசாய வெற்றி, நாட்டின் வெற்றி!!

கோகோ விதைகளை பதனிடும் முறை

அ. கைலாசம், சிவ. வெங்கடேசன், *கல்லாறு பழ ஆராய்ச்சிப் பண்ணை.*



நன்கு பழுத்த கோகோ பழமும் அதன் குறுக்கு, நெடுக்கு வெட்டுத் தோற்றங்களும்.

கோகோ ஒரு சிறந்த பான வகைப் பயிர். கோகோ மரத்தின் விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் உணவுத் தன்மையில் மிகச் சிறந்து காணப்படுகின்றது. எனவே இப்பயிரை நமது நாட்டில் பயிர் செய்து நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும் அதன் மூலம் தற்போது வெளிநாடுகளிலிருந்து அதிக செலவில் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்கவும் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகின்றன. இப்பயிர் முதன் முதலாக நீலகிரி மலையின் சரிவில் அமைந்துள்ள கல்லாறு அரசாங்கப் பண்ணையில் தான் விஞ்ஞான ரீதியுடன் பயிர் செய்ய ஆரம்பிக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக ஆயிரக் கணக்கான கோகோ நாற்றுகள் இப்பண்ணை யிலிருந்து இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் குறிப்பாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோவை, நீலகிரி மாவட்டங்களில் இப்பயிரை பலர் பயிரிடத் துவங்கியுள்ளனர். பல இடங்களில் இப்பயிர் காய்ப்புக்கு வரத் துவங்கியுள்ளது. இம்மரத்தின் பழங்களிலிருந்து கிடைக்கும் விதைகளைப் பக்குவப்படுத்தி அதனின்றும் பானமாக அருந்தும் கோகோ (drinking cocoa), ஒவல்டின், போர்ன்விட்டா போன்றவைகளும், மிட்டாய்கள் போல் தயாரிக்கப்படும் கட்டி சாக்லேட் (bar chocolate) கொட்டை சாக்லேட் (nut chocolate), பால் சாக்லேட் (milk chocolate) முதலியவைகளும் தயாரிக்கப்படுகின்றன. மேற்கூறிய பானங்களும் இனிப்புகளும் தயாரிப்பதற்கு பதப்படுத்திய கோகோ விதைகள் (cured cocoa) தேவை. பக்குவப்படுத்தப்படாத விதைகள் விற்பனைக்கு உகந்ததல்லவாகையாலும் நன்கு பக்குவப்படுத்தப்பட்ட விதைகள் கணிசமான அளவு அதிக விலைக்கு விற்கப்படுவதாலும் கோகோ விதைகளை நன்முறையில் பதப்படுத்தும் முறையைத் தெரிந்து கொள்வது மிக அவசியம். எனவே விவசாயிகளின் நலன் கருதி கல்லாறு பழ ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டு பிடிக்கப்பட்ட கோகோ விதைகளைப் பக்குவப் படுத்தும் முறை கீழே விளக்கப்பட்டுள்ளது.

நன்கு பழுத்த கோகோ பழங்கள் மஞ்சளுடன் கூடிய சிவப்பு நிறமாக இருக்கும். அப்பழங்களை ஆட்டினுல் உள்ளிருக்கும் விதைகள் ஆடும். இத்தகைய பழங்களை மட்டுமே அறுவடை செய்யவேண்டும். பின்னர் பழங்களை நீளவாட்டத்தில் இரண்டாகப் பிளந்து உள்ளிருக்கும் விதைகளைத் தனியே எடுக்கவேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட விதை களைப் புழுங்க வைக்கும் மரப் பெட்டியில் (fermenting box) நிரப்ப வேண்டும். இம்மரப் பெட்டி மா, பலா போன்ற சுலபமாக அமிலங்களால் அரிக்க முடியாத பலகையில் (non-corrossive wood) செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். இபெட்டியின் அடிப்பாகத்தில் இரண்டு அங்குலத்திற்கு ஒன்றுக பல துவாரங்கள் இருக்கவேண்டும்



விதைகளைப் புழுங்கவைக்கும் பெட்டியின் மேல், பின்புறத் தோற்றங்கள்.

இப்பெட்டியில் விதைகளைப் போடுவதற்கு முன்னர் பெட்டியின் உள் பக்கங்களில் வாழைச் சருகுகளைக் கொண்டு விதைகள் பலகையில் படாவண்ணம் அமைக்கவேண்டும். பின்னர் விதைகளைப் பெட்டியினுள் கொட்டி மேற்புறத்தை வாழைச் சருகுகளைக் கொண்டு இறுக்கமாக மூடிவிடவேண்டும். சாதாரணமாக சுமார் 50 பவுண்டுக்கு மேல் கோகோ விதைகள் இருந்தால் மிக நல்ல முறையில் பதப்படுத்தலாம். மேற்கூறிய பெட்டியை அமைக்கும் பொழுது ஆணிகள் பெட்டியின் உள்பக்கம் தெரியாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

விதைகள் நிரப்பப்பட்ட பெட்டியை பூமியின் மட்டத்திற்கு மேல் சுமார் ஒரு அடி உயரத்தில் வைக்கவேண்டும். விதைகளைப் பெட்டியிலேயே 4 நாட்களுக்கு விட்டுவிடவேண்டும். ஆனால் விதைகளை 24 மணிக்கு ஒரு முறை கையால் நன்கு கலக்கிவிட வேண்டும். ஏனெனில் அப்பொழுது தான் எல்லா விதைகளும் ஒரே மாதிரியாக பக்குவப்படுத்த ஏதுவாகும். இவ்வாறு நான்கு நாட்கள் பெட்டியில் வைக்கப்பட்ட விதைகள் சிறிது பழுப்பு நிறமாக மாறிக் காணப்படும். இவ்விதைகளின் மேல் ஒட்டிக்கொண்டிருந்த வெண்ணிறக் குழம்பு போன்ற பொருள் நீக்கப்பட்டிருக்கும். நான்கு நாட்களுக்குப் பின்னர் இவ்விதைகளை உலர்த்த வேண்டும்.

இவ்வாறு புழுங்க வைக்கப்பட்ட விதைகளை பெட்டியினின்றும் எடுத்து வெயிலில் (sun drying) உலர்த்த வேண்டும். இவ் விதைகளை மூங்கில் பாய்களின்மேல் முதல் நாள் இரண்டு அங்குலத்திற்குப் பரப்ப வேண்டும். பின்னர் விதைகளைப் பரவலாகப் பரப்பி ஈரப்பதமின்றி உலர்த்திவிட வேண்டும். சாதாரணமாக விதைகள் நன்கு உலர்வதற்கு வெயிலில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் உலர்த்த வேண்டும்.



பதப்படுத்தப்பட்ட கோகோ விதைகளின் தோற்றம்.

உலர்த்தப்பட்ட விதைகள் நல்ல பழுப்பு நிறத்துடனும் (cinnamon colour) ஈரப்பதமின்றியும் இருக்கும். இவ்விதைகளை உலர்த்தும்பொழுது விதைகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தூசு, மண்போன்றவைகளையும், உடைந்த அல்லது பிஞ்சு விதைகளையும் நீக்கிவிட வேண்டும். பின்னர் இவ்விதைகளை பாலித்தீன் உள்ளுறையுள்ள சாக்குப்பைகளில் சேகரித்து வைக்கவேண்டும். ஏனெனில் உலர்த்தப்பட்ட விதைகள் ஈரத்தை அதிகமாக உறிஞ்சும் தன்மையுடையதால் அவைகள் எளிதில் பூஞ்சணத்தினால் பாதிக்கப்பட நேரிடும். இவ்விதம் நல்ல முறையில் பக்குவப்படுத்தி சேமித்த விதைகள் விற்பனைக்கு தயாராகின்றன.

தென்னந் தோப்புப் பராமரிப்பு

மார்ச்—ஏப்ரல் மாதக் குறிப்பு.

தண்ணீர் பாய்ச்ச வசதி உள்ள தென்னந் தோப்புகளுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தோப்பை கோடை மழைக்காக உழுது தயார் செய்யவேண்டும்.

கருந்தலைப் புழு மார்ச்சு-எப்ரல் மாதங்களில் அதிகமாக தென்படும். பூச்சி தாக்குதல் பரவுதலுக்கு முன்னே எல்லா எச்சரிக்கைகளும் எடுக்கவேண்டும். கருந்தலைப் புழுக்கள் தென்பட்டவுடனேயே டி. டி. டீ. 0·2 சதவீதம் தெளிக்க வேண்டும் அல்லது அவைகளைக் கொல்லும் பூச்சிகளை விடுவிக்க வேண்டும்.

மேல் மட்டைகளின் இடுக்குகளில் தோன்றும் குருத்து வண்டுகளை தேடிப் பார்த்து, வண்டு எடுக்கும் நீண்ட ஊசியினால் வண்டுகளைக் குத்தி எடுத்துவிட வேண்டும். பத்து சத பி. எச். சி. யையும் மணலையும் சரிபாகமாகக் கலந்து தென்னை மட்டை இடுக்குகளிலும் துவாரங்களிலும் தூவினால் குருத்து வண்டுகளின் மட்டை வெட்டுதலை தடுப்பதோடு, சிவப்பு வண்டு உள்ளே செல்லாமலும் தடுக்கலாம்.

மணற்பாங்கான தோப்புகளுக்கு குளத்து வண்டலும், இறுகிய களிமண் பாங்கான தோப்புகளுக்கு மணலும் அடித்தல் வேண்டும்.

மிளகாய் சாகுபடி

எல். சிவஞானம், உதவி மிளகாய் வல்லுநர்,
டி. எஸ். இராஜாமணி, உதவி மிளகாய் ஆராய்ச்சியாளர், மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.

அதிக ஊதியம் தேடித் தரும் பயிர்களில் மிளகாய் முக்கியமானதாகும். நாம் தினமும் உண்ணும் உணவில் மிளகாய் முக்கிய இடம் பெறுகிறது. பச்சை மிளகாயாகவோ, வத்தலாகவோ, மிளகாய்ப் பொடியாகவோ நமது உணவில் மிளகாய் பங்கு பெறுகிறது. மிளகாயில் வைட்டமின் 'சி' சத்து (Ascorbic acid) அதிகம். இம்முக்கியத்தின் காரணமாகவும், அதிக ஊதியம் தேடித் தருவதாலும் பத்து ஆண்டுக்குள் நம் நாட்டில் மிளகாய்ச் சாகுபடி செய்யும் பரப்பளவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.

மிளகாய் ரகங்கள்

மிளகாயில் பல ரகங்கள் உண்டு. பழத்தின் நீளத்தைக் கொண்டும், காரத்தன்மையைக் கொண்டும் பல ரகங்களாகப் பிரிக்கலாம். அதிகக் காரமுள்ள "ஊசி மிளகாய்கள்" (Needle Chillies) வெற்றிலை கொடிக்கால்களிலும் தோட்டங்களிலும் காணப்படுகின்றன. காரமே இல்லாத மிளகாய்கள் நீலகிரி போன்ற மலைப்பிரதேசங்களில் வருகின்றன.

நீளமாகவுள்ள மிளகாய் "சம்பா" என்றும் உருண்டையாகவுள்ள மிளகாய், 'குண்டு அல்லது முண்டு' என்றும் கூறப்படுகின்றன. சம்பா மிளகாய் தென் ஜில்லாக்களிலும், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, ஜில்லாக்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் "குண்டு" மிளகாய் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது.

சம்பா மிளகாயை "சாத்தூர் சம்பா" என்று திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் கூறுகிறார்கள். "கொளுஞ்சி" என்றும் மதுரை ஜில்லாவில் சில பகுதிகளில் அழைக்கப்படுகிறது.

சாகுபடி

தமிழ்நாட்டில் சுமார் 1,84,000 எக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 75 சதவீதம் மிளகாய் இறைவைப் பயிராகவே சாகுபடியாகிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் பரமக்குடி முதுகுளத்தூர் பகுதிகளிலும், சேலம் ஜில்லாவில் ஒசூர் பகுதிகளிலும் மிளகாய் மானாவாரியாகப் பயிர் செய்யப்படுகிறது.

நல்ல செம்மண் பூமியிலும் கரிசல் பூமியிலும் மிளகாய் பயிரிடலாம். செழிப்புள்ள பூமியும், வடிகால் வசதியுமுள்ள பூமியும் மிளகாய்ச் சாகுபடிக்குச் சிறந்தது. சோளம், கம்பு அல்லது நிலக்கடலை போன்ற பயிர்கள் மிளகாயுடன் மாற்றுப் பயிர்களாக சாகுபடி செய்யப்படுகின்றன. ஆமணக்கு, அகத்தி, வெங்காயம், போன்ற பயிர்கள் மிளகாய் சாகுபடி செய்யும் நிலத்தில் வரப்புப் பயிராக பயிரிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மூன்று பருவங்களில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது—

(1) **ஐப்பசிப் பயிர்.—(செப்டம்பர்—அக்டோபர்).—** செப்டம்பர்—அக்டோபர் மாதத்தில் நாற்று விட்டு, நவம்பர் மாதத்தில் நடப்படுகிறது. மே—ஜூன் மாதங்களில் செடிகள் பிடுங்கப்படுகின்றன.

(2) **கோடைப் பயிர் —(மார்ச்—ஏப்ரல்)—** மார்ச்–ஏப்ரல் மாதங்களில் நாற்று விட்டு, மே-ஜூன் மாதத்தில் நடவு செய்து, நவம்பர்–டிசம்பர் மாதத்தில் செடிகள் அப்புறப் படுத்தபடுகின்றன.

(3) **ஆடிப்பயிர் —(மே-ஜூன்)—** கோயம்புத்தூர் ஜில்லாவில், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை இடங்களில் மே—ஜூன் மாதத்தில் நாற்று விட்டு ஜூலை—ஆகஸ்டு மாதங்களில் நட்டு ஜனவரி பிப்ரவரி மாதங்களில் பயிர் முடிந்து விடுகிறது.

இறைவை சாகுபடி

நாற்றங்கால்.—மிளகாய் நாற்றங்காலுக்கென தண்ணீர் தேங்காத மேடான இடம் தேர்ந்தெடுத்தல் அவசியம். சுமார் ஒரு சென்ட் நாற்றங்கால் ஒரு எக்கர் நடபோதுமானது. நாற்றங்காலை சுமார் மூன்று அல்லது நான்கு முறை நன்கு உழவு செய்து, தொழு உரம் அல்லது நன்கு மக்கிய கம்போஸ்டை ஒரு சென்டுக்கு ஒரு வண்டி போடலாம். ஒரு சென்டுக்கு ஒன்று முதல் $1\frac{1}{2}$ ராத்தல் விதை தேவை. விதைக்கும் முன்பு, ஒரு ராத்தல் விதைக்கு ஒரு கிராம் அக்ரசான் வீதம் கலந்து விதைக்கவேண்டும். விதைத்த பிறகு விதை தெரியாமல் பாத்திகளில் சாம்பலை இலேசாக போடலாம். நாற்றங்காலுக்கு ஒருநாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சவும். பூமியின் ஈரத்தைக் கருதியும், மழையை அனுசரித்தும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் நாற்றங்காலில் தண்ணீர் தேங்கக்கூடாது. நாற்றுகளை சுமார் 40 முதல் 45 நாட்கள் வரை நாற்றங்காலில் வைத்திருக்கலாம்.

நடவு நிலம்.—நடவு பூமியை மூன்று அல்லது நான்கு முறை உழுது கம்போஸ்டோ அல்லது தொழு உரமோ ஒரு எக்கருக்கு சுமார் 10 டன் வீதம் போடலாம். தென் ஜில்லாக்களில் மிளகாய்க்கு சுமார் 4,500 ஆடு கிடை வைக்கப்படுகிறது. ஒரு எக்கருக்கு சுமார் 200 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும் 25 கிலோ மியூரியேட் அஃப் பொட்டாஷையும் கடைசி உழவுக்கு முன் போட்டு உழுது விடவும். ஒரு எக்கருக்கு 135 கிலோ கடலைப் பிண்ணாக்கும் விவசாயிகள் போடுகிறார்கள். பாத்திகளோ அல்லது ஏழிகளோ (பார்கள்) போடப்படுகின்றன.

நாற்பது, நாற்பத்தைந்து நாள் நாற்றை 1½ அடி × 1½ அடி இடைவெளியில் நடவும். நடும் போது இரண்டு நாற்றுகளாக நடுவது நல்லது. பிற்கு ஒரு மாதங் கழித்து தூருக்கு ஒரு நாற்றை விட்டு விட்டு, நன்கு வளராத நாற்றை பிடுங்கி விட வேண்டும். இறைவைப் பயிருக்கு மூன்று முறை கைக்களை கொடுத்து மூன்று முறைகளைக் கொத்தால் கொத்தியும் கொடுக்கப்படுகிறது. இரண்டு முறை மண்வெட்டி அணைக்கப்படுகிறது. எக்கருக்கு 140 கிலோ அமோனியம் சல்பேட் போடவும். இதை இரண்டு தடவையாக போடுதல் சிறந்தது. முதல் 70 கிலோ அமோனியம் சல்பேட்டை நட்டு 50 நாட்கள் கழித்து போடவேண்டும். பிறகு 20 நாட்கள் கழித்து மீதி 70 கிலோவை போடவேண்டும்.

மிளகாய்ச் செடிக்கு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சவும். பூமியின் ஈரத்தைக் கருதியும், மழையை அனுசரித்தும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஐப்பசி காலப் பயிருக்கு சுமார் 25 தண்ணீரும், கோடைகாலப் பயிருக்கு சுமார் 40 தண்ணீரும் பாய்ச்சலாம். நட்ட மூன்று மாதங் கழித்து பழம் பறிப்புக்கு வரும். நன்கு பழுத்த சிவப்பான பழங்களைப் பறித்து, களத்தில் ஐந்து முதல் ஏழுநாள் வரை வெயிலில் காய வைக்கப் படுகிறது. சுமார் ஐந்து முதல் ஆறு தடவை பழம் பறிக்கலாம்.

மகசூல்.—எக்கருக்கு சுமார் 680 கிலோ 1500 (ராத்தல்) வத்தல் 2,050 கிலோ பச்சை மிளகாய் கிடைக்கிறது.

மானாவாரி சாகுபடி.

மானாவாரி மிளகாய்க்கு நாற்று விடுவதில்லை. 'முண்டு' அல்லது 'குண்டு' ரகம் மானாவாரி யாகப் பயிரிடப்படுகிறது. இப்பயிர் செப்டம்பர் மாதம் முதல் மே மாதம் வரை பயிரிடப்படுகிறது. இக்காலத்தில் சராசரி சுமார் 15 அங்குலம் மழை கிடைக்கிறது. வடகிழக்கு பருவக்காற்று மழையைக் கொண்டும், கோடைக்கால மழையைக் கொண்டும் செடி வளர்ந்து பலன் தருகிறது. ஐந்து அல்லது ஆறு உழவு போட்டு ஒரு எக்கருக்கு 10 டன் தொழு உரமோ அல்லது மக்கிய காம்போஸ்டோ போடப்படுகிறது. ஒரு எக்கருக்கு 4,000 ஆட்டுக்கிடையும் வைக்கப்படுகிறது. செப்டம்பர்–அக்டோபர் மாதத்தில் விதைக்கப்படுகிறது. எக்கருக்கு சுமார் 5 ராத்தல் விதை தேவை. பிப்ரவரி மாதத்தில் பழத்திற்கு வருகிறது. சுமார் இரு முறை கைக்களையும், களைக் கொத்தும் கொடுக்கப்படுகிறது. பூமியின் ஈரத்தை அனுசரித்தும், மழையைக் கருதியும் 11 கிலோ யூரியா போடப்படுகிறது. சுமார் நான்கு முதல் ஐந்து முறை பழம் பறிப்பு எடுக்கப்படும்.

மகசூல்.—எக்கருக்கு 270 கிலோ (600 ராத்தல்) வத்தல் அல்லது 820 கிலோ பச்சை மிளகாய் கிடைக்கிறது.

பயிர்பாதுகாப்பு

பூச்சி.

சுருட்டைப்பூச்சி (Thrips).— இப் பூச்சி நாற்றங்காலி லும், நட்ட பயிரினும் இலைகளைப் பாதித்து சுருட்டை விழச் செய்கிறது. இதனால் பூ, மொட்டுகள் உதிர்ந்து விடு கின்றன.

இதைக்கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதவிகிதம் தூவுங் கள். அல்லது பி. எச். சி. 50 சத மருந்தைத் தெளிக்க வும் செய்யலாம்.

நோய்கள்

நாற்றழுகல் (Damping off).— நெருக்கமாக விதைத்த இடத்திலும், தண்ணீர் தேங்கிய நாற்றங்காலிலும், நாற்று கள் இந்நோயால் பாதிக்கப்பட்டு பெருமளவில் அழுகி விடுகின்றன.

தடுப்பு முறை

* விதைப்பதற்கென நல்ல விதையைத் தேர்ந் தெடுக்க வேண்டும்.
* சரியான அளவு விதை விதைக்க வேண்டும்.
* மேடான பாத்திகள் போட்டு தண்ணீர் தேங்காமல் வடிகால் வசதி செய்ய வேண்டும்.
* விதைக்கு முன், ஒரு ராத்தல் விதைக்கு ஒரு கிராம் அக்ரசான் மருந்து வீதம் கலந்து விதைக்கவேண்டும்.
* பிறகு நாற்றுப் பாவி 10 நாட்கள் கழித்து, 15 நாட்களுக்கு ஒருமுறை 1 சதவிகிதம் போர்டோ கலவை அல்லது "வெட் சிரசானே" தெளிக்க வேண்டும். 100 காலன் தண்ணீருக்கு 1 ராத்தல் சிரசான் கரைக்கவும்.

நுனி பழம் அழுகல் நோய் (Die back and fruit rot) பாதிக்கப்பட்ட செடி நுனியிலிருந்து கருகிக் கொண்டு வந்து பெருமளவில் பட்டுவிடுகிறது. பழம் அழுகி, வெள்ளை நிறமாகி விடுகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட பழத்தை "சண்டுவத்தல்" என்று கூறுகிறார்கள்.—

தடுப்பு முறை

* வியாதியால் பாதிக்கப்படாத செடிகளிலிருந்து நல்ல பழத்தைத் தேர்ந்தெடுத்து, அவ்வாறு தேர்ந் தெடுக்கப்பட்ட பழத்திலிருந்து எடுக்கப்பட்ட விதையைத்தான் விதைக்க உபயோகப்படுத்த வேண்டும்.
* இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ராத்தல் விதை யுடன் 1 கிராம் அக்ரசான் கலந்து விதைக்க வேண்டும்.
* நட்டவுடன் சுமார் 25 நாட்கள் கழித்து, 15 நாட் களுக்குகொரு முறை 1 சதவீதம் போர்டோ கலவையை நிலத்திலும், செடியிலும் அடிக்க வேண்டும்.

வைரஸ் நோய்

மிளகாயில் ஒருவித வைரஸ் நோயும் தோன்றுகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட செடியின் இலைகள் உதிர்ந்து, செடிகள் பட்டுவிடுகின்றன. பாதிக்கப்பட்ட செடியைப் பிடுங்கி, எரித்துவிட வேண்டும்.

வற்றல் அளவும் விதை முளைக்கும் தன்மையும்

மிளகாய் பழத்திலிருந்து 3-ல் ஒரு பங்கு காய்ந்த பழம் அல்லது வற்றல் கிடைக்கும். பழம் பறித்த உடனே காய வைத்து விதைக்கப் போட்டால், விதைகள் முளைக்கின்றன. சுமார் ஒரு ஆண்டு வரை வத்தலாக வைத்து விதை எடுத்து போட்டாலும் விதையின் முளைக்கும் தன்மை குறைவதில்லை

மானாவாரி மிளகாய்ச் சாகுபடி— செலவும் இலாபமும்

(ஒரு ஏக்கருக்கு)	ரூ. பை.	ரூ. பை.
(1) நடவுக்கு பூமியைப் பக்கு வப் படுத்த செலவு (preparatory cultivation):		
ஆறு உழவுக்கு செலவு ஒரு உழவுக்கு ரூ. 5 வீதம்.		30 00
(2) உரமும், உரமிடலும் (manures and manuring):		
10 டன் கம்போஸ்ட் கிரையம் போடும் செலவு உள்பட.	100 00	
4,000 ஆட்டுக் கிடை உரம் மூடும், செலவுகள் உள்பட.	35 00	
25 பவுண்டு யூரியா, போடும் செலவு உட்பட ..	10 00	
மொத்தம் ..	145 00	145 00
(3) விதையும் விதைத்தலும் (seeds and sowing) :		
5 பவுண்டு விதை கிரையம்	17 00	
விதை மூடும் செலவு ..	3 00	
மொத்தம் ..	20 00	20 00
(4) நட்டபின் செலவுகள் : (after cultivation):		
இரண்டு கைக்களை எடுக்க, 20 பெண் கூலிகள் ..	30 00	
இரண்டு தடவை மண் சுறண்டல், 10 பெண் கூலிகள்	15 00	
மருந்து அடித்தல், பைட்ட லான் B.H.C. 50 சத வீதம் அடிக்க கிரையம், கூலி உள்பட ..	10 00	
நான்கு முறை பழம் பரிக்க	30 00	
மொத்தம் ..	85 00	85 00
மொத்த சாகுபடி செலவு ..		280 00

மகசூல் :

600 பவுண்டு வத்தல் விலை 1 பவுண்டு ரூ. 1 வீதம்	600 00
மொத்த சாகுபடிச் செலவு.	280 00
இலாபம் ...	320 00

ஒரு ஏக்கருக்கு இலாபம் ரூ. 320.00.

இறைவைப் பயிர் மிளகாய்ச் சாகுபடி— செலவும் இலாபமும்

(ஒரு ஏக்கருக்கு)	ரூ. பை.	ரூ. பை.
5) நடவுக்கு பூமியைப் பக்கு வப்படுத்த செலவு : [after cultivation]		
மூன்று உழவுக்கு செலவு.	19 00	
பாத்தி, வாய்க்கால் போட செலவு	9 00	
மொத்தம் ...	28 00	28 00
(2) உரமும் உரமிடலும் (manures and manuring):		
10 டன் கம்போஸ்ட் ..	60 00	
224 பவுண்டு சூப்பர் பாஸ் பேட்	55 00	
50 ராத்தல் முரியேட் ஆப் பொட்டேஷ்	10 00	
224 ராத்தல் அமோனியம் சல்பேட்	37 00	
உரம் அடித்தல், பரப்ப மூட செலவு	9 00	
உர உப்புக்கள் போட, மூட செலவு	5 00	
மொத்தம் ..	176 00	176 00
(3) விதையும் விதைத்தலும்: (seeds and sowing):		
ஒரு ஏக்கர் நடவேண்டிய நாற்று உண்டு பண்ண செலவு	48 00	
நடவுக்கு செலவு ..	17 00	
மொத்தம் ..	65 00	65 00
(4) நட்டபிறகு செலவுகள் (after cultivation):		
பாத்தி, வரப்பு வாய்க்கால் எடுத்துக்கட்ட செலவு ..	11 00	
குழி தண்ணீர் விட செலவு (pot watering)	9 00	
இரண்டு கைக்களை எடுக்க.	47 00	
நான்கு முறை களை சுறண்ட செலவு ..	17 00	
இரு முறை மண்வெட்ட செலவு	7 00	
பூச்சி, வியாதி இவைகளைக் கொல்ல மருந்துக் கிரை யம், அடிக்க உள்பட செலவு	71 00	
மொத்தம் ..	162 00	162 00
(5) தண்ணீர் பாய்ச்சல் (irrigation):		
தண்ணீர் பாய்ச்ச செலவு, கூலி	42 00	42 00
(6) பறிப்பு :		
நான்கு முறை பழம் பறிப்பு	81 00	81 00
மொத்த சாகுபடிச் செலவு ..		554 00

மகசூல் :

1,500 ராத்தல் வத்தல் கிரையம் (ராத்தல் 80 பை வீதம்) ..	1200 00
சாகுபடி செலவு ..	554 00
இலாபம் ..	646 00

ஒரு ஏக்கருக்கு இலாபம் ரூ. 646·00.

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64
தேதி 21-4-64 உத்தரவின்படி
1964-65 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையமுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்-கோஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்–64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,

75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால் பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

சிறு தானியங்களுக்கு இரசாயன உரமிடல்

கெ. வாசுதேவ மேனேன், உதவி விவசாய இரசாயன நிபுணர், சென்னை.
வெ. இராஜாமணி, விவசாய விஸ்தரிப்பு அனுவலர், கோவில்பட்டி.

விவசாயிகள் உரத்தின் மகிமையை நன்குணர்ந்திருப் பினும், எப்படி உரத்தை பயன்படுத்துவது, எப்படி அதிகப்படியான மகசூல் அடைவது என்பதையும் சிறிது சிந்திக்கவேண்டும். இன்று பெரும்பாலான விவசாயிகள் ரசாயன உரங்களை அதிக அளவில் உபயோகப்படுத்துவ தில்லை. உதாரணமாக தீவிர உரமிடும் திட்டத்தில், விரைந்து பலன்தரக்கூடிய இரசாயன உரங்களின் அளவை மற்ற முற்போக்கு நாடுகளில் உபயோகிப்பதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டில் உபயோகிப்பதுதான் மிகக் குறைவு என்பது தெரியும்.

விவசாயிகள் உரத்தை விளை நிலங்களுக்கு தகுந்த காலங்களில் தேவையான அளவில் இடாததால் உற்பத்தி குறைய ஏதுவாகிறது. ரசாயன உரத்தை எல்லா விவ சாயிகளும் நல்ல முறையில் அளவோடு போட்டால்தான் மகசூல் அதிகரிக்கும். இதை வலியுறுத்தவே அரசாங்கம் விவசாயிகளின் வயல்களில் உர நிரூபணத் திட்டங்கள் வகுத்து செயலாற்றி வருகின்றது. இதற்கு தேவைப்படும் உரங்களை அரசாங்கம் விவசாய இலாகா மூலம் இலவச மாக வினியோகித்தும் வருகிறது.

இத்திட்டத்தின்படி நிறுவப்பட்ட உரநிரூபணப் பண்ணை களின் மூலம் அக்கம்பக்கத்து விவசாயிகள் அவைகளை பார்த்துத் தெரிந்து கொள்ளவும் இதன் முக்கியத்து வத்தை நன்கு எடுத்துச் சொல்லவும் அதிக வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இந்த மாதிரி நிரூபணப் பண்ணைகளின் மூலம் ரசாயன உரங்களின் உபயோகம் விவசாயிகளிடையே வெகுவாகப் பரவி வருவதுடன் பலவகைப் புள்ளி விபரங் களும் தெரிய வருகின்றன. அவையாவன:—

(1) பலவகை நிலங்களில் வளரும் பலவிதப் பயிர்களின் ரசாயன உரத் தேவையைத் தெரிந்து கொள்ளுதல்.

(2) பலவகை தழைச்சத்து ரசாயன உரங்களில் ஒன்றுக் கொன்றுள்ள பாகுபாடுகளையும் அமோனியம் சல்பேட் நைட்ரேட், கால்சியம் அமோனியம் நைட்டிரேட் ஆகியவற்றின் பலன்களையும் ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்ளுதல்.

(3) தழைச் சத்து ரசாயன உரத்தையும் தானியசத்து ரசாயன உரத்தையும் கலந்து போடுவதன் பலனையும், சில பயிர்களுக்கு மேற்கண்ட ரசாயன உரங்களுடன், சாம்பல் சத்து ரசாயன உரத்தையும் கலந்து போடுவதன் பலனையும் தெரிந்து கொள்ளுதல்.

(4) கலவை உரங்களின் பலன்களை தெரிந்து கொள்ளு தல் முதலியன,

நிரூபணம் செய்து காட்டுதல்தான் திட்டத்தின் முக்கிய நோக்கம். அதோடு நம்பகமான விளைச்சல் புள்ளி விபரங் களும் சேகரிக்கப்படுவதால் அவைகளை வைத்து விவசாயி களுக்கு சரியான தகவல்களும் ஆலோசனைகளும் சொல்ல வசதியாய் இருக்கிறது.

இத்திட்டத்தின் அடிப்படையிலே கோவில்பட்டி வட்டா ரத்தில் விவசாயிகளின் வயல்களில் நிரூபணங்கள் அமைத்ததில் சில பயன்தரும் விபரங்கள் தெரியவந் துள்ளன. அவையாவன :—

(1) இறைவை சோளத்திற்கு ஒரு ஏக்கருக்கு 80 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் 30 கிலோ யூரியாவும் கலந்து உர மிட்டதால் 1486 கிலோ (அதாவது $20\frac{1}{2}$ மூட்டை) சோளம் மகசூல் கிடைத்தது. இது உரமிடாத நிலத்தில் கிடைத்த மகசூலை விட 289 கிலோ (4 மூட்டைகள்) அதிகமாக இருப் பதால் நிகர வருமானமும் சுமார் ரூபாய் 230 அதிகப்படி யாகக் கிடைத்திருக்கிறது.

(2) இதே போல் கேழ்வரகு பயிரிருக்கும் 1 ஏக்கருக்கு 150 கிலோ வீதம் கலவை உரம் 2 நெ. (12-6-6) (இக் கலப்பு உரத்தில் 12 சதவிகிதம் தழைச்சத்து, 6 சதவிகிதம் தானிய சத்தும் 6 சதவிகிதம் சாம்பல் சத்தும் உள்ளது.) உரமாக இட்டதின்மூலம் 1027 கிலோ (சுமார் $14\frac{1}{4}$ மூட்டை கள்) மகசூல் கிடைத்திருக்கிறது. இது உரமிடாத நிலத் தில் கிடைத்த மகசூலைவிட 223 கிலோ (அதாவது 3 மூட்டைகள்) அதிகம். இதன்மூலம் நிகர வருமானமும் ரூ. 167 அதிகப்படியாகக் கிடைத்துள்ளது.

இவைகளை அனுசரித்து எல்லா விவசாயிகளும் ரசாயன உரத்தை அதிகப்படியாக உபயோகித்து பலனடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பில் கொடுத்துள்ள விபரங்களின்படி உரம் இடுவதால் அதிகப்படியான மகசூலும் வரவும் கிடைக் கிறது என்பது தெளிவாகிறது. நிரூபணங்கள் மூலம் உரங்கள் போடுவதால் உண்டாகும் விளைச்சல் மாறுபாட் டையும் நாம் நன்கு அறிய முடிகிறது.

ஆகவே விவசாயிகள் அவ்வப்போது தேவையான உரங்களை கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெற்று தங்கள் நிலங்களுக்கு குறித்த அளவு (விவசாய இலாகா சிபாரிசின் படி) உரமிட்டு அதிக மகசூலை அடையவேண்டும்.

இணைப்பு

சோளம் (இறைவை)

வ. எண்.	ஊர்.	பயிர் வகை.	விலைச்சல் அளவு (10 செண்டில்).		
			உரம்போடாதது.	சூப்பர்+யூரியா 8·168 3·175	யூரியா. 3·175.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			கிலோ.	கிலோ.	கிலோ.
1	நாலாட்டின்புத்தூர் ..	சோளம் (இறவை).	117·4	146·1	135·6
2	கடலையூர்	,,	122·0	151·1	146·6
		மொத்தம் ..	239·4	297·2	282·2
		சராசரி ..	119·7	148·6	141·1

இதிலிருந்து உரம் போட்ட வகையில் அதிகப்படியான மகசூலையும் அதனால் கிடைக்கும் வரவையும் நோக்குவோம்.—

பிளாட் வகை.	உரத்திற்காக ஆன செலவு எக்கருக்கு.	விளைச்சல் அளவு எக்சரில்.	உரம் போட்டதால் கூடுதல் விளைச்சல் எக்கருக்கு.	செலவு போக கூடுதல் தொகை (வரவு) எக்கருக்கு.	இதர குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
உரம் போடாதது	இல்லை.	1,197 கி.	இல்லை.	இல்லை.	..
சூப்பரும் யூரியாவும் போட்டது	ரூ. 40·00	1,486 கி.	289 கி.	ரூ. 231·20	கிலோ 0·80 ரூ. (தற்போது விலை)
யூரியா மட்டும் போட்டது ..	ரூ. 22·00	1,411 கி.	214 கி.	ரூ. 171.	,,

இதிலிருந்து சூப்பரும் யூரியாவும் சேர்ந்து போட்டதால் செலவு போக அதிகப்படியாக ரூ, 230 எக்கருக்கு கிடைக்கிறது என்பது தெள்ளென தெரிகிறது.

கேழ்வரகு (இறைவை)

வ. எண்.	ஊர்.	பயிர் வகை.	விளைச்சல் அளவு (10 செண்டில்)		
			உரம் போடாதது.	மிக்சர் I (25 கிலோ)	மிக்சர் II (25 கிலோ)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			கிலோ.	கிலோ.	கிலோ.
1	கடலையூர்	ராகி (இறவை)	79·9	85·8	100·7
2	M. துரைச்சாமிபுரம் ..	,,	80·8	87·1	104·8
		மொத்தம் ..	160·7	172·9	205·5
		சராசரி ..	80·4	86·4	102·7

இதிலிருந்து உரம் போட்ட வகையில் அதிகப்படியான மகசூலையும் அதனால் கிடைக்கும் அதிகப்படியான வரவையும் நோக்குவோம்.—

பிளாட் வகை.	உரத்திற்காக ஆன செலவு எக்கருக்கு.	விளைச்சல் அளவு எக்கருக்கு.	உரம் போட்டதால் கூடுதல் விளைச்சல் எக்கருக்கு.	செலவு போக கூடுதல் தொகை வரவு எக்கருக்கு.	இதர குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	ரூ.	கிலோ.	கிலோ.	ரூ.	
உரம் போடாதது	இல்லை.	804	இல்லை.	இல்லை.	..
மிக்சர் I போட்டது	50	864	60	45	கிலோ ரூ. 0·75 வீதம்.
மிக்சர் II போட்டது	62·50	1027	223	167	,,

தஞ்சைக்கு வடிமுனைக் குழாய்க் கிணறுகள்

அதி தீவிர திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்கி நீர்ப்பாசன வசதியை அபிவிருத்தி செய்ய அரசாங்க ஆணை (பலவகை) எண் 3, தேதி 2—1—65 வகை செய்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் 2,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்கி நீர்ப்பாசன வசதியை அபிவிருத்தி செய்வதற்கானதொரு தீவிர திட்டத்தை 1965-ம்வருட ஆரம்பத்திலிருந்து அரசாங்கம் செயல்படுத்துகிறது. இதனால் தஞ்சை விவசாயிகள் உபரியாக கோடையில் ஒருபோக பயிரை சாகுபடி செய்து பயனடைய ஏதுவாகிறது. நீர்த்தேக்க நிலங்களும் நல்ல நிலைபெற முடியும்.

ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3,000 வரை கடனுதவியும் ரூ. 150-க்கு மேற்படாத 10 சத மான்யமும் அளிக்கப்படும். மேலும் விபரங்களுக்கு தஞ்சையிலுள்ள உதவி விவசாயப் பொறியாளரை அணுகவும்.

மறுதாம்புச் சோளம்

ப. அ. முஹமது இப்ருஹீம், வே. க. பழனிஆண்டி, நா. மாரியப்பன்,
மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.

வெள்ளைச் சோளம் நல்லதொரு உணவுப் பயிராகும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் வெள்ளைச் சோளம் தோட்டப் பயிராக சாகுபடியாகிறது. கோடையில் விதைப்பதால் இது கூடுதல் விளைவு தருகிறது. வெள்ளைச் சோளத்தில் ஒரு உயர்ந்த வித்து, கோவில்பட்டி விவசாய ஆராய்ச்சிப்பண்ணை வெளியிட்டுள்ள கே. 2. வெள்ளைச்சோளம். இது சத்துள்ளதும் சுவை மிகுந்ததுமாகும். சித்திரைப் பட்ட விதைப்பிற்கு கே. 2. வெள்ளைச் சோளம் சிறந்தது. பங்குனி சித்திரையில் விதை விதைத்தால், ஆனி, ஆடியில் பயிர் அறுவடைக்கு வருகிறது. முத்துப்போன்ற தானியங்கள் எண்ணி மூன்றே மாதங்களில் அறுவடைக்கு வருகிறது. இதனுடைய விளைவு எக்கருக்கு, மூவாயிரம் இராத்தல் தானியமும், ஆருயிரம் இராத்தல் தட்டையுமாகும்.

சோளம் பயிராகும் தென் மாவட்டங்களில் ஆனி, ஆடி மாதங்களில் சோளம் அறுவடையான பின்பு சில பகுதிகளில் சில மாதங்களுக்கு நிலங்கள் தரிசாகவே கிடக்க நேரிடுகிறது. நிலத்திலிருந்து அதிகச் சத்தைச் சோளம் எடுத்துக்கொள்வதால் அடுத்து வரும் பயிருக்கு அதிக உரம் கொடுத்தாக வேண்டியுள்ளது. ஆதலால் நீர் பாய்ச்ச ஓரளவு வசதியுள்ளவர்கள் நிலத்தை தரிசாக விடாது சோளம் மறுதாம்புப் பயிர் விடுவது அதிக வருவாய்க்கு நல்லதொரு வழியாகும்.

முதற் பயிரின் தட்டையை அறுத்த பிறகு தூரிலிருந்து முளைத்து வளர்கின்ற பயிர்தான் மறுதாம்புப் பயிர். கோவில்பட்டி விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் தரிசாகக் கிடக்கின்ற இடத்தில், மறுதாம்பு தக்கபடி பலன் தருமா என்று கண்டறிய பரிசோதனை செய்யபட்டது.

ஆடி 2-ம் வாரத்தில் கே. 2 வெள்ளைச் சோளம் அறுவடை செய்யப்பட்டது. அறுவடைக்குப் பின்பு மறுதாம்புப் பயிர் வளரத் தொடங்கிற்று. சில நாட்கள் சென்ற பின்பு வலிய நாற்றுக்களை வயலிலே நிற்கவிட்டு மெலிய நாற்றுக்கள் களையப்பட்டன. களைகள் எடுக்கப்பட்டு உரமும் வைக்கப்பட்டது. எக்கர் ஒன்றுக்கு 50 கிலோ யூரியா வீதம் பயிருக்கு உரம் வைக்கப்பட்டது. சோளப் பயிரை தாக்குகின்ற பூச்சிகளைத் தடுப்பதற்கு வேண்டி பி.எச்.சி. 10 சத விகிதம் மருந்துத்தூள் மறுதாம்புப் பயிருக்குத் தூவப்பட்டது. மூன்று முறைகள் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. எண்பத்து மூன்று நாட்களில் கதிர் அறுவடைக்கு வந்தது. முதற்பயிரைவிட மறுதாம்புப் பயிர் முன்கூட்டியே அறுவடைக்கு வருகிறது.

எக்கர் ஒன்றிற்கு தானியம் 1,287 இராத்தலும் தட்டை 5,874 இராத்தலும் கிடைத்திருக்கின்றன. மறுதாம்புப் பயிரால் நமக்குக் கிடைக்கக் கூடிய நிகர இலாபம் எக்கருக்கு ரூ. 213–90 ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளது வகைப்படுத்தப்பட்ட வரவு செலவுக் கணக்கு:—

பயிர் விளைவித்த இடத்தின் பரப்பளவு 0·20 எக்கர்.

செலவு

	ரூ.	பை.
பயிர்களை ஒழுங்குபடுத்தலும் பயிர் ஊடே களை எடுத்தலும். (ஐந்து பெண்கள்)	5	00
10 கிலோ யூரியாவின் விலை	7	00
10 கிலோ யூரியா உரம் இடுவதற்கு .. (ஒரு பெண்)	1	00
4·7 கிலோ. பி.எச்.சி. 10 சத விகிதம் மருந்தின் விலை.	1	89
பி.எச்.சி. மருந்து தூவுதற்கு (½ ஆண்) ..	0	68
மூன்று தடவை நீர் பாய்ச்சுவதற்கு (2½ ஆண்)	3	40
தட்டைகளை அறுக்கவும் கதிர்களைச் சேர்க்கவும் (1 ஆண், 5½ பெண்.)	6	86
கதிர்களை அடிக்கவும், தானியம் புடைக்கவும் (½ இணை மாடு, 1 ஆண், 1 பெண்.)	3	24
மொத்தச் செலவு ..	29	07

வரவு

	ரூ.	பை.
தானியம்		
ஒரு கிலோ 50 பைசா வீதம் 117 கிலோ தானியத்தின் விலை.	58	50
தட்டை		
40 கிலோ ஒரு ரூபா வீதம் 534 கிலோ. தட்டையின் விலை.	13	35
மொத்த வருவாய் ..	71	85

வரவு—செலவு.

	ரூ.	பை.
மறுதாம்புப் பயிரினுல் வரவு ..	71	85
மறுதாம்புப் பயிரினுல் செலவு ..	29	07
20 செண்டிற்கு இலாபம்	42	78

ஒரு எக்கருக்கு இலாபம் 42·78×5=213·90.

ஆனி-ஆடி மாதங்களில் அறுவடைக்குப்பின் மறுதாம்பு விட்டு உபரி லாபமடையுங்கள்.

தரிசு விடாது தானியம் பெருக்குவீர் !

FACTAMFOS
F.A.C.T. LTD. ALWAYE
GRANULATED
AMMONIUM
PHOSPHATE
KERALA STATE
50 Kg. GROSS
பயிர்களுக்கு பயன்படும்
பாக்டம்பாஸ்
(அமோனியம் FACT பாஸ்பேட்)
அமோனியாவையும் பாஸ்பாரிக அமிலத்தையும் 16 : 20 விகிதத்தில் தயாரிக்கப்படும் அதிசய உரம் பாக்டம்பாஸ் நிலைத்து நிற்ககூடியது. ஈரத்தை ஈாக காதது. தண்ணீரில் முற்றிலும் கரைந்து தங்கு தடையின்றி பாயவல்லது. பயிரின் பயனுள்ள பகுதிகள் எல்லாவற்றின் வளர்ச்சியையும் ஊககுவிக்கும். பொதுவாக பயிர் ஆரோக்கியமாக வளர ஆக்கமளிககிறது.
உங்கள் தேவைக்கு பிராந்திய கிளை ஆபீஸுக்கு எழுதவும்
FACT
foremost name in fertilisers!
பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : ஏலூர், உத்யோகமண்டல் P.O. கேரள ராஜ்யம்
பிராந்திய கிளை ஆபீஸ் :
130, அவனுசி ரோடு, கோயமுத்தூர்-1
RITERION-FT-327

புதிய ரக கருங்கண்ணிப் பருத்தி--கே. 7

எஸ். கமலநாதன், பருத்தி ஆராய்ச்சி நிபுணர், கோயம்புத்தூர்—3.

கடந்த பதினைந்து ஆண்டுக் காலமாக பாரத மத்திய பருத்திக் குழுவின் பொருளாதார உதவியுடன் கோவில் பட்டி, கோயம்புத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையங்களில் கருங்கண்ணி ஆராயச்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதன் பலனாக தமிழ் நாட்டில் விநியோகிக்கப்படும் கருங் கண்ணி ரகங்களின் மகசூலும் தன்மையும் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் வெற்றியாக 1956-ம் வருடம் கே. 6 (பாண்டியன்) என்ற பருத்தி ரகம் வெளியிடப்பட்டது. இதுவே அதிக இழைநீளம் கொண்ட கருங்கண்ணி ரகமாகும். மேலும் அதிக மகசூலும் இழை நீளமும் கொண்ட பருத்தி ரகங்களைக் கண்டறி வதன் பொருட்டு தொடர்ந்து இத்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் வெற்றி யாக இப்பொழுது கே. 7 என்ற பருத்தி ரகம் கண்டு பிடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த ரகத்தின் பொறுக்கு விதை அடுத்த ஆண்டிலிருந்து விவசாயி களுக்கு விநியோகிக்கப்படும்.

கே. 7 என்ற புதிய கருங்கண்ணி ரகம் தமிழ்நாட்டின் 5 லட்சம் எக்கர் கரிசல் நிலங்களிலும் மானாவாரியாகப் பயிர் செய்ய உகந்தது. ஆராய்ச்சி நிலையத்திலும் விவசாயி களின் நிலங்களிலும் நடத்தப்பட்ட எல்லாப் பரிசோதனை களிலும் இந்த ரகம் (கே. 7) கே. 6 ஐவிட மகசூலிலும், குணதிசயங்களிலும் அதிக அளவு முன்னேற்றம் காண் பித்துள்ளது. கே. 6ஐவிட 13 சதவிகிதம் அதிக பருத்தி மகசூலும், 16 சதவிகிதம் அதிக பஞ்சு மகசூலும், 13 சதவிகிதம் அதிக லாபமும் கொடுத்துள்ளது. மேலும், அரைவை, இழைநீளம், நூலின் பலம், நூற்புத் தன்மை இவற்றிலும் கே. 6 ஐவிட சிறந்ததாக உள்ளது. இதன் இலைகள் கே. 6 ஐப் (பாண்டியனைப்) போல் இல்லாது. அகன்ற இலைகள் பெற்றுள்ளதால் கே. 6 ரகம் போன்ற கலவன்களை இலகுவில் களைந்துவிட உதவியாக இருக்கும். மேலும் செழித்து வளரும் சக்தி வாய்ந்த இந்த ரகத்தின் செடிகள், நிறைய கிளைகளையும், நல்ல பருத்தி காய்களை யும், நல்ல வெடிப்புத் தன்மையையும் பெற்றுள்ளது.

அட்டவணை

குணதிசயங்கள். (1)	கே. 6. பாண்டியன். (2)	கே. 7. (3)	கே. 7-ன் சதவீத மேன்மை. (4)
பருத்தி மகசூல் (எக்கருக்கு ராத்தலில்) ..	336	378	13
பஞ்சின் மகசூல் (எக்க ருக்கு ராத்தலில்) ..	114	133	16
அரைவை சதவீதம் ..	34	35	1
இழை நீளம் (அங்குலம்)	0·99	1·03	2·4
நூற்புத் தன்மை (இழை நூல்) ..	32's	33's	3·1
நூல்கனம் (30's) ..	1382	1443	3·5
எக்கருக்கு வருவாய் ரூ. ..	213	243	30

மேற்கூறிய அம்சங்களைக்கொண்ட கே. 7 ரகத்தை கே. 6 (பாண்டியனு)க்குப் பதிலாக விநியோகம் செய்து ஐந்து லட்சம் எக்கரில் பயிரிடுவதன் மூலம் தமிழ் நாட்டுக்கு ஆண்டுதோறும் 1·65 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. நமது விவசாயி களுக்கும் எக்கருக்கு 30 ரூபாய்க்குமேல் அதிக இலாபம் கிடைக்கும். ஆகவே ஒவ்வொரு பருத்தி விவசாயியும் இந்த ரகத்தைப் பயிரிட முன்வர வேண்டும்.

தந்தையைப்போல் தனயன்...



ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான சிலவற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம்மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILISERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

RFY-39TAM

மாசிப்பட்டப் பருத்தியை தாக்கும் பூச்சிகளை தடுத்து அதிக லாபம் பெறவும்

பி. எம். ஸ்ரீனிவாசன், எம். பஷீர், பி. ஏ. முகமது இப்பராஹிம், ஏ. ஜனகராஜன்.

இராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜ பாளையம் வட்டாரங்களில் மாசிப்பட்டப் பருத்தி எம்.சி.யு. 2 இறைவைப் பயிராக மாசி மாதம் துவங்கி ஆடி மாதம் வரையில் பல ஆயிரக்கணக்கான ஏக்கராக் களில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் விளைவு பூச்சி தாக்குதலினால் மிகவும் பாதிக்கப்படுகிறது. பூச்சிகளின் தடுப்பு மூறைகளை தக்க காலத்தில் கையாண்டால் நல்ல விளைச்சல் கிடைக்கும்.

பருத்திச் செடிகள் முளைத்து சில நாட்களில் அவைகளை தத்துப்பூச்சி (jassid), அசுவுனி (aphid) ஆகிய இலைகளைத் தாக்கும் பூச்சிகள் மிகவும் பாதிக்கின்றன. மேற்குறிப்பிட்ட பூச்சிகள் இரண்டும் இலைகளில் உள்ள நீர்ச்சத்தை உறிஞ்சு கின்றன. அதனால் இலைகள் மஞ்சள் பழுப்பு நிறம் அடைந்து சுருட்டை நோய் ஏற்பட்டு கடைசியில் காய்ந்து உதிர்கின்றன. இதனால் செடிகளின் வளர்ச்சி மிகவும் குன்றுகிறது. மேலும் இப்பூச்சிகள் செடிகளின் பூக்கும் தன்மையையும் காய்க்கும் தன்மையும் மிகவும் பாதிக் கின்றன.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—
ராஜா பண்ணைத் தோட்டம்
தபால் பெட்டி எண். 1423, சென்னை-17.
தந்தி : RAJSEED போன் : 42262

செடிகளில் பூ மொட்டுக்களும் பூக்களும் காய்களும் தோன்றும் சமயத்தில் அவைகளை பருத்திக் காய்ப்புழுக்கள் *Earias* sp. (spotted ballworms and pink ballworms) துளைத்து நாசம் செய்கின்றன. அதனால் சில பூ மொட்டுக்களும் காய்களும் உதிர்கின்றன. மிஞ்சிய காய்கள் நல்ல முறையில் முதிர்ந்து வெடிப்பதில்லை. காய் களில் உள்ள பருத்தி கறை படிந்து விடுகிறது. பருத்தி விதைகளும் பாதிக்கப்படுகின்றன. இதனால் பெருவாரியாக பருத்தி மகசூல் பாதிக்கப்படுகிறது. தற்பொழுது மேற்குறிப் பிட்ட பூச்சிகளை கார்பரில் என்ற நூதன பூச்சி கொல்லும் மருந்தை உபயோகித்து தடுத்து அதிகப் படியான சுத்தமான பருத்தி மகசூலை அடையலாம். கோவில்பட்டி பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணையில் பூச்சி ஆராய்ச்சிப் பிரிவில் செய்த ஆராய்ச்சி முடிவுகளி லிருந்து இது கண்டு பிடிக்கப்பட்டது.

கோவில்பட்டி பிராந்திய விவசாய ஆராய்சசிப் பண்ணையில் 1964-ம் வருடம் கோடை காலத்தில் (பிப்ரவரி —ஆகஸ்ட்—மாசி—ஆவணி) எம்.சி.யு. 2 மாசிப்பட்டம் இறைவைப் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளை பூச்சி கொல்லி மருந்துகளினால் தடுக்கும் முறைகள் பற்றி ஆராய்ச்சி செய்ததில் இவ்வகை பருத்தியைத் தாக்கும் தத்துப்பூச்சி (jassid), அசுவுனி (aphid), காய்ப்புழு (ballworms), தண்டுகளைப் பாதிக்கும் வண்டு (stemweevil) இவைகளின் உபாதையை நல்ல முறையில் தடுக்க முடியும் என்றும் அதனால் பெருவாரியாக அதிக மகசூல் பெற முடியும் என்றும் திட்டவட்டமாக கண்டு பிடிக்கப்பட்டது.

கார்பரில் 10 சத விகிதத்தூள் அல்லது கார்பரில் 0·1 சதவிகித தண்ணீர் கலவை (1 அவுன்ஸ் 85 சதவிகிதம் கார்பரில் மருந்தை 5 காலன் தண்ணீரில்) ஆகிய இரண்டும் பருத்தி இலைகளைத் தாக்கும் தத்துப்பூச்சி, அசுவுனி ஆகிய இரண்டு பூச்சிகளின் தொல்லையை மிகவும் நேர்த்தியான முறையில் தடுக்கும் சக்தி வாய்ந்தவை என்று கண்டு பிடிக்கப்பட்டது.

கார்பரில் 10 சத விகிதத்தூள், டயல்டிரின் 0.1 சதவித தண்ணீர் கலவை (1 அவுன்ஸ் 50 சத விகிதம் டயல்டிரின் 3 காலன் தண்ணீரில்), கார்பரில் 0·1 சதவிகித தண்ணீர் கலவை ஆகிய மருந்துகளை செடிகள் முளைத்து 3 அல்லது 4 வாரத்திற்கு பிறகு (4 வார பருவத்தில்) 15 நாட்களுக்கு ஒரு முறை 8 தடவைகள் அடித்ததினால் முறையே 22·5 சதவிகிதம், 32 சதவிதம், 33 சதவிகிதம் பருத்திக்காய்களே காய் புழுக்களினால் பாதிக்கப்பட்டன. மருந்தடிக்கப்படாத பயிரில் 50 சதவிகிதம் காய்கள் பாதிக்கப்பட்டன.

கார்பரில் 10 சத விகிதம் தூள் அடிக்கப்பட்ட பருத்தியில் ஏனைய மருந்துகளை விட மிகவும் அதிகப்படியான பருத்தி மகசூல், ஏக்கராவுக்கு 4315 ராத்தல், கிடைத்தது. அடுத்தபடியாக டயல்டிரின் 0·1 சத விகிதம் தண்ணீர் கலவை மருந்தடித்த பயிரில் ஏக்கராவுக்கு 3,673 ராத்தல் பருத்தி கிடைத்தது. மேற்குறிப்பிட்ட இரண்டு மருந்து களுக்கு அடுத்தபடியாக கார்பரில் 0·1 சதவிகிதம் தண்ணீர் கலவை உபயோகிக்கப்பட்ட பயிரில் ஏக்கராவுக்கு 3572 ராத்தல் பருத்தி கிடைத்தது. மருந்து அடிக்கப்படாத பயிரில் ஏக்கராவுக்கு 2723 ராத்தல் பருத்திதான் கிடைத்தது.

கார்பரில் 10 சத விகிதம் தூள், டயல்டிரின் 0·1 சத விகிதம் தண்ணீர் கலவை, கார்பரில் 0·1 தண்ணீர் கலவை மருந்துகள் அடித்த பயிர்களில் முறையே ஏக்கரா வுக்கு 4136 ராத்தல், 3421 ராத்தல், 3382 ராத்தல் நல்ல, சுத்தமான கறைபடியாத, தூய வெண்மை வாய்ந்த நேர்த்தியான பருத்தி கிடைத்தது. எந்த விதமான மருந்துகளும் அடிக்கப்படாத பயிரில் 2436 ராத்தல் நல்ல பருத்தி கிடைத்தது.

கார்பரில் தூள், டயல்டிரின் தண்ணீர் கலவை, கார்பரில் தண்ணீர் கலவை ஆகிய மருந்துகள் அடிக்கப்பட்ட பயிர் களில் மருந்துடிக்கப்படாத பயிரைவிட முறையே ஏக்கராவுக்கு 1700 ராத்தல், 985 ராத்தல், 946 ராத்தல் நல்ல பருத்தி கிடைத்தது.

டயல்டிரின் 0·1 சத விகிதம் தண்ணீர் கலவை மருந்து பருத்தி தண்டுகளை பாதிக்கும் வண்டுகளை மிகவும் நல்ல முறையில் தடுக்கும் சக்தி பொருந்தியது என்று கண்டு பிடிக்கப்பட்டது. கார்பரில் 10 சத விகிதம் தூள், என்ட்ரின் 0·02 சதவிகிதம் தண்ணீர் கலவை (1 அவுன்ஸ் என்டரின் 6¼ காலன் தண்ணீரில்) மாலதியான் 0·1 சத விகிதம் தண்ணீர் கல்வை, என்ட்ரின் 0·02 சத விகிதம், பாரதியான் 0·025 சதவிகிதம் (1 அவுன்ஸ் பாலிடால் 12½ காலன் தண்ணீரில்) தண்ணீர் கலவை மருந்துகளும் தண்டுகளைத் தாக்கும் வண்டை நல்ல முறையில் தடுத்தன.

மற்ற மருந்துகளைவிட கார்பரில் 10 சத விகிதம் தூள் மருந்திற்குள்ள சில விசேஷ குணங்கள் யாவெனில்:

(1) விஷ சத்து மற்ற மருந்துகளைவிட மிகவும் குறைவு

(2) எந்தவிதமான கெட்ட வாசனையும் இல்லாதது.

(3) சுலபமாக கையாளலாம்.

(4) செடிகளை ஊக்கமாக வளரச் செய்யும் தன்மை யுடையது.

(5) செடிகளில் பூக்களும் காய்களும் சீக்கிரமே தோற்றுவிக்கும் சக்தி வாய்ந்தது.

(6) காய்கள் விரைவில் முதிர்வதற்கும் நல்ல முறை யில் வெடிப்பதற்கும் உதவுகிறது.

(7) அசுவுனி, தத்துப்பூச்சி, காய்புழுக்கள் ஆகிய பூச்சி களைத் தடுக்கும் சக்தி மற்ற மருந்துகளை விட அதிகம் உடையது.

ஆகவே மாசிப் பட்டம் எம்.சி.யு. 2 பருத்தியைத் தாக்கும் பூச்சிகளைத் தடுப்பதற்கு கார்பரில் 10 சத விகிதம் மருந்துத்தூளை தூவி அதிக லாபம் அடையவும்.

அட்டவணை

வெவ்வேறு மருந்துகள் அடிக்கப்பட்ட பாத்திகளில் கிடைத்த பருத்தியின் விவரம்.

நிர். (1)	மருந்தின் பெயர், விவரம். (2)	காய்ப் புழுக்களினால் பாதிக்கப்பட்ட காய்களின் சதவிகிதம். (3)	மொத்த பருத்தி மகசூலின் எடை. (கிலோ கிராமில் ஒரு ஹெக்டேருக்கு) (4)	தண்டுகளை பாதிக்கும் வண்டுகளினால் பாதிக்கப்பட்ட தண்டுகளின் சத விகிதம். (5)
1	கார்பரில் 10 சத விகிதம் தூள்	22·4	4900	3·8
2	கார்பரில் 0·1 சத விகிதம் தண்ணீரில் கலவை	31·9	4060	14·0
3	டயல்டிரின் 0·1 சத விகிதம் தண்ணீர் கலவை	33·4	4167	0·9
4	கார்பரில் 0·1 சத விகிதம் தண்ணீரில் கலவை—பாரதியான் (பாலிடால்) 0·025 தண்ணீர் கலவை மாறி மாறி அடித்தல்.	38·9	4117	13·0
5	பி. எச். சி. 10 சத விகிதம் தூள், டி. டி. டீ. 5 சதவிகிதம் தூள், கந்தகத்தூள் கலவை (3:3:1).	39·8	3516	11·3
6	என்ட்ரின் 0·02 சத விகிதம் தண்ணீர் கலவை—பாரதியான் (பாலிடால்) 0·025 சத விகிதம் தண்ணீர் கலவை—மாறி மாறி அடித்தல்	42·6	3786	5·3
7	என்ட்டுரக்ஸ் எம். 0·02 சத விகிதம் தண்ணீர் கலவை.	46·2	3458	2·0
8	தயோமெட்டான் 0·1 சத விகிதம் தண்ணீர் கலவை	55·2	3763	12·4
9	மருந்தடிக்கப்படாத பயிர்	49·2	3215	21·4

'மாருத்' சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேய்ரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)

குணங்கள் :

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்லில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினுல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

'மாருத்'
நீடித்த அழுத்த சக்தியோடு
முதுகில் சுமந்து செல்லக்
கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினுல் செய்யப்பட்டது
ரூ. 230

14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினுல் செய்யப்பட்டது
ரூ. 230



தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் வினியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2.

ஏன் முடியாது?

எஸ். குழந்தைசாமி, எம்.எஸ்ஸி. (விவ.), டி.எச்., எஸ். ராஜரத்தினம், பி.எஸ்ஸி. (விவ.),
விவசாயப் பிரிவு, விவசாயக் கல்லூரி, கோவை.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்", "முயற்சி திருவினையாக்கும்" என்ற முதுரைகளுக்கு ஏற்ப நமது நாட்டில் உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்தில் நாம் எடுத்துக்கொண்ட முயற்சி ஓரளவுக்கு நல்ல பலனைத் தந்திருப்பினும், நாம் எதிர் நோக்கின குறியீட்டை அடைய இன்னும் தீவிர முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் நமது நாட்டின் உணவுப் பொருள் உற்பத்தி 55 மில்லியன் டன்கள். முதல் ஐந்தாண்டு திட்ட இறுதியில் அது 66 மில்லியன் டன்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் அது 74 மில்லியன் டன்னுக்கு வந்தடைந்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் நமது நாட்டின் உற்பத்தி 100 மில்லியன் டன்னுக்கும் உயர்ந்தால் ஒழிய, அதிவேகமாகப் பெருகிவரும் மக்களுக்குப் போதிய அளவு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியது. ஆகவே, அதி தீவிர உணவு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடவேண்டிய நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இனி அதற்கான வழி வகைகளைக் காண்போம்.

1. நிலத்தை நன்ருகப் பயன்படுத்துகிரேமா?

பயிர் நன்கு செழித்து வளர நிலம் நன்கு பண்படுத்தப்படுதல் அவசியம். கோடைக்காலத்தில் கிடைக்கும் மழை ஈரத்தின் உதவியைக் கொண்டு மானுவாரி மற்றும் தோட்டக்கால் நிலத்தை நன்கு உழுதுவிட்டு முளைத்து வளரும் அருகு மற்றும் கோரை முதலான களைகளைக் களைந்தெரிதல் அவசியம். மற்றும் கற்கள் நிறைந்திருப்பின் அவைகளையும் அப்புறப்படுத்த வேண்டும்.

தரிசாகக் கிடக்கும் நிலங்களையும் மேடு பள்ளமாக பல ஆண்டுகளாக சாகுபடி செய்யாமல் கிடக்கும் நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வருவது அவசியம். இம்மாதிரியான நிலங்களை நிரவுவதற்கும், சமப்படுத்துவதற்கும், உழவு செய்வதற்கும் புல்டோசர், டிராக்டர் முதலான இயந்திரங்களை லாபகரமான முறையில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இவைகள் விவசாய இலாக்காவிலும், தனி நபர்களிடமும், கூட்டுறவு சங்கங்களிலும் கிடைப்பதை நாமறிவோம். ஆகவே, கிடைக்கும் நிலமனைத்தையும் நன்கு சீர்படுத்தி விவசாய உற்பத்திக்கு உபயோகப்படுத்த வேண்டும்.

2 பயிர்களுக்குப் போதிய உரமிடுகிரேமா?

நேரடியாகவும், ஆராய்ச்சியின் மூலமும் பயிர்களுக்குத் தக்க உரமிடுவதால் கிடைக்கும் அனுகூலத்தை நாமறிந்தும், காலாகாலத்தில் நாம் நமது பயிர்களுக்கு போதிய அளவு உரமிடுவதில்லை. இதன் காரணமாக நமது விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுகிறதென்பதை உணர வேண்டும். நஞ்சை புஞ்சை நிலங்களில் விளையும் எல்லா விதப்பயிர்களுக்கும் எக்காலத்தில் எந்த உரம் எந்த அளவு இடவேண்டும் என்பதை ஒவ்வொரு விவசாயியும் விவசாய இலாக்காவின் மூலம் அறிந்து அதன்படி உரமிட்டால் நமது விளைச்சல் நிச்சயமாக உயரும். இச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நிலத்தின் விளை திறனை விவசாய இலாக்காவின் உதவியால் மண் பரிசோதனை செய்து அதற்கு தகுந்த யோசனைப்படி நடப்பதால் மிகுந்த பலன் கிடைக்கும். மண் பரிசோதனைக்கு கட்டணம் கிடையாது. நமது விவசாயிகள் மண் பரிசோதனைபற்றி நன்கு தெரிந்து அதன் பலனைப் பெற்று விளைச்சலை அதிகப்படுத்துவதை தங்கள் நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

மானுவாரி நிலங்கள் பெரிதும் புறக்கணிக்கப்படுகின்றன. அவைகளுக்கு நாம் சாதாரணமாக உரமிடுவதில்லை. இதன் காரணமாகவே நமது மானுவாரி நிலங்களில் விளைச்சல் நாம் எதிர்பார்க்கும் அளவுக்குக் கிடைப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் முக்கியமாக பயிரிடப்படும் பருவத்தில் முப்பது அங்குலத்திற்கு மேலாக மழை கிடைக்கிற இடங்களிலெல்லாம் ஏக்கர் ஒன்றுக்கு 20 ராத்தல் தழைச்சத்து (நைட்டிரஜன்), அதாவது 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட், உரமிட்டு விளைச்சலை 40 முதல் 60 சதம் அதிகப்படுத்தலாம். இது விவசாய ஆராய்ச்சி கண்டதொரு முடிவு. அந்த முறையை பின்பற்றி மானுவரி நிலங்களிலும் நமதுவிளைச்சலை அதிகப்படுத்த முடியுமென்பதை நாம் தெரியவேண்டும். புஞ்சை விளைந்தாலே பஞ்சம் நீங்கும்.

3. நல்ல வித்துக்களை உபயோகப்படுத்துகிரேமா?

தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுக்கு வித்துக்களை உபயோகிப்பதன்மூலம் நமது விளைச்சலை 10 முதல் 15 சதவிகிதம் அதிகரிக்க முடியும் என்பது ஆராய்ச்சியின் முடிவு. தற்காலத்தில் பொறுக்கு விதை விஸ்தரிப்பிலும், விநியோகத்திலும் விவசாய இலாகா தீவிர கவனம் செலுத்தி வருவதை நாம் உணர்வோம். நம்மில் பலரும் இதன் முக்கியத்துவத்தையும், பலனையும் உணரவில்லை. உணவு உற்பத்திப் பெருக்கத்தில், ஒரே ஒரு புதிய பழக்கத்தையோ, சாதனையையோ மட்டும் கையாண்டால், நாம் எதிர்பார்க்கும் முழுப்பயனையும் அடைய முடியாது. உதாரணமாக, நாம் நமது பயிருக்கு வெறும் உரம் மட்டும் போதிய அளவில் இடுவதால் மட்டும் முழுப்பயனை அடைய முடியாது. அதற்கு நல்ல பொறுக்கு விதையையும் நாம் உபயோகித்தல் அவசியம். ஆகவே, பொறுக்கு விதையின் மூலம் நல்ல பலனைப் பெறுவதற்குத் தக்கபடி உரமிடுதல் அவசியமாகிறது.

4. பயிரைப் பாதுகாக்க வேண்டாமா ?

நிலத்தை நல்ல முறையில் பண்படுத்தியும் நல்ல பொறுக்கு வித்துக்களை உபயோகித்தும், மற்றும் வேண்டிய அளவு உரத்தைக் காலாகாலத்தில் இட்டும் நாம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காமல் போவதும் உண்டு. காரணம் நாமறிந்ததே. அதாவது, பயிரில் நாம் எதிர்பார்த்தோ, எதிர்பார்க்காமலோ பூச்சிகளும் நோய்களும் ஏற்படுவதால் பயிரின் வளர்ச்சியைத் தடுப்பதுடன் விளைச்சலைக் குறைத்தும் விடுகின்றன. ஆகவே, நமக்கு நல்ல விளைச்சல் கிடைப்பதற்கு பயிர்ப் பாதுகாப்பு மிக முக்கியமானது என்பதை நாம் நன்ருகத் தெரியவேண்டும். பயிர்ப் பாதுகாப்பில் "வருமுன் காத்தல்" என்ற கொள்கையைப் பின்பற்றுவதுதான் சிறந்த பலனளிக்கும் என்பது அநுபவ ரீதியான உண்மை. ஆகவே நாம் விளைவிக்கும் பயிரில் பூச்சியோ, நோயோ வருமுன் அதற்கு மருந்து தெளித்துப் பாது காத்தால்தான் நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்; பயிர்ப்பாதுகாப்பு விஷயத்தில் நமது அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டுள்ளது. அதற்காக வேண்டிய யோசனைகளும், மேலும் பூச்சி பூஞ்சண நோய்களுக்கான மருந்துகளும் குறைந்த விலைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான இயந்திரக் கருவிகளும் எளிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே, கிடைக்கக் கூடிய இந்த மாதிரியான சலுகைகளையும் பயன்படுத்திக் கொண்டு நாம் நல்ல முறையில் பயிர்ப் பாதுகாப்பைக் கையாண்டால்தான் விளைச்சலைப் பெருக்கமுடியும்.

ஆகவே, நமது நாட்டின் விளைச்சலை அதிகரிக்க வேண்டுமானுல் தரிசாகக் கிடைக்கும் நிலங்களும் சாகுபடிக்குத் தகுதியாகவிருக்கும் மேடுபள்ளமான பிரதேசங்களும் சீர்படுத்தப்படுவதோடு, நீர்ப்பாசனவசதி அதிகரிக்கப்படவும் வேண்டும். அத்துடன் நிலம் நல்ல முறையில் பாங்கு செய்யப்படுதல் அவசியம். நல்ல பொறுக்கு வித்துக்களைக் காலாகாலத்தில் தக்க பருவத்தில் பயிரிடுதல் முக்கியமாகிறது. உற்பத்திப் பெருக்கத்துக்கு ஊக்கமளிக்க போதிய அளவு உரமிடுதல் மேலும் முக்கியம். இத்தனை முயற்சிகளும் வெற்றிபெற வேண்டுமாயின் பயிர்ப்பாதுகாப்பை மறக்கக் கூடாது. ஆக, இம்மாதிரியான தீவிர முயற்சியை திடநம்பிக்கையுடன் கையாண்டு நாம் சாகுபடியில் ஈடுபட்டு ஆண்டிற்கு ஒருபயிர் செய்யுமிடத்தில் இருபயிரும், இருபயிர் செய்யுமிடத்தில் மூன்று பயிர்களும் சாகுபடி செய்தால் ஏன் நமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது ?

—❖—

WATER DIVINER

30வருட அனுபவமுள்ள தண்ணீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்

———

மேன்மைதங்கிய சென்னை கவர்னர், திருவாங்கூர் மஹாராஜா, தென் பிராந்திய மிலிடரி தளபதி, P.W.D., C.P.W.D., முற்போக்குள்ள தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் பலராலும் ஆதரிக்கப்பட்டவர்.

கிணறுகள் வெட்ட ஊற்றுள்ளதும் பாறையற்றதுமான இடம் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும். பழைய கிணறுகள் அடிவெட்டு வெட்டினுல் அல்லது போரிங் போட்டால் பிரயோஜனப்படுமா, படாதா என்றும் ஆலோசனை கூறப்படும்.

தயவுசெய்து விசாரிக்கவும் :—

N. சாம்பசிவன்,
வாட்டர் டிவைனர்,
"ஸ்ரீரமண வில்லா", 41, கச்சேரி ரோடு,
மைலாப்பூர் சென்னை-4.
[போன் : 73762]

——— நற்சாக்ஷிப் பத்திரங்கள் ———

தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், லிமிடெட், தஞ்சாவூர்.

நீங்கள் எங்கள் மில்லில் குறிப்பிட்டுக் கொடுத்த போரிங் கிணற்றிலிருந்து திருப்திகரமாக தண்ணீர் சப்ளை கிடைக்கின்றது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒப்பம்) K. திருவேங்கட முதலியார்,
29—12—1964. சேர்மன்.

*　　*　　*

அமராவதி கூட்டுறவு சர்க்கரை மில், லிமிடெட்,
மெய்வாடி ரோடு, மடத்துக்குளம் P.O.
(கோயமுத்தூர் ஜில்லா)

நீங்கள் எங்கள் தொழிற்சாலையில் குறிப்பிட்டுக் கொடுத்த போரிங் கிணற்றிலிருந்து 2½ அங்குல பம்புக்கு திருப்திகரமாக சப்ளை கிடைத்துக் கொண்டிருக்கிறது. பழைய கிணற்றை நீங்கள் கூறியபடி ஆழம் செய்ததில் அதிகமாக தண்ணீர் கிடைக்கிறது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) பாலசுப்ரமணியம்,
27—12—1964. மனேஜர்.

மண் பரிசோதனை

வெ. **வரதராசன்,** மண் பரிசோதனை உதவியாளர், மண் பரிசோதனை நிலையம், கோவில்பட்டி.

இடம் : **கிராமச் சாவடி.**

(மண் பரிசோதனை உதவியாளர், ஊர் நாட்டாண்மைக் காரர், மற்றும் ஊர் விவசாயிகள் அங்கு இருக்கின்றனர். நாட்டாண்மைக்காரர், மண் பரிசோதனை உதவியாளரை பேச அழைக்கிறார்.)

மண் பரிசோதனை உதவியாளர்.—ஊர் நாட்டாண்மைக் காரருக்கும், மற்றும் கூடியிருக்கும் விவசாயிகள் அனை வருக்கும் என் வணக்கம். நாட்டாண்மைக்காரர் வேண்டு கோளின்படி மண் பரிசோதனை விபரங்களைப் பற்றி இப் பொழுது உங்கள் முன்பு பேச இருக்கிறேன். விவசாயத் தில் மண் பரிசோதனை ஒரு முக்கியமான அம்சம். அதன் விபரங்களைப் பற்றி ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். மண் பரிசோதனை செய்வதால் மண்ணின் தரத்தை தெரிந்து கொள்ள முடிகிறது. மண்ணிலுள்ள உர அளவை மதிப்பிட்டு என்னென்ன பயிருக்கு என்ன உரங்கள் இட வேண்டும். எந்த அளவில் இட வேண்டும் என்று அறிய முடிகிறது. மேலும் மண்ணில் ஏதேனும் தீய குணங்கள் இருந்தால் அதை எவ்வாறு போக்கி விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக ஆக்க முடியும் என்ற விவரங்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே மண் பரிசோதனையைப் பற்றி ஒவ் வொருவரும் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். இப்பொழுது உங்களுக்கு மண் பரிசோதனை சம்பந்தமான சந்தேகங்கள் ஏதாவது இருந்தால் எங்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

நாட்டாண்மைக்காரர்.—நம்ம மாகாணத்தில் எங் கெல்லாம் இந்த மண் பரிசோதனை நிலையங்கள் இருக்குங்க ?

மண் பரிசோதனை உதவியாளர்.—கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் முதலிய மாவட்டங்களுக்கு கோயம் புத்தூரில் ஒன்றும், தஞ்சாவூர், திருச்சி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு ஆடுதுறையில் ஒன்றும், திருநெல்வேலி, மதுரை, இராம நாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு கோவில்பட்டியில் ஒன்றும் ஆக தற்சமயம் மூன்று இருக்கின்றன. இந்த மண் பரிசோதனைக்காக நீங்கள் எந்த வித கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை. இது இலவசமாகச் செய்யப்படுகிறது.

நாட்டாண்மைக்காரர்.—எங்க மண்ணை எப்படிங்க மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்புகிறது. நாங்களே எடுத்து அனுப்புறதா ? நீங்களே வந்து எடுத்துக்கொண்டு போவீர்களா ?

மண் பரிசோதனை உதவியாளர்.—நீங்களே எடுத்து அனுப்பலாம். அல்லது உங்கள் நிலம் ரொம்ப மோச மாயிருக்கு, விளைச்சலுக்கு சரியாக வரவில்லை, நாங்க பார்த்த பிறகுதான் மண் எடுக்கனும் என்று இருந்தால், உதவி மண்வள நிபுணர், மண் பரிசோதனை நிலையம், நிலையத்தின் இடம் முதலி யவைகளைக் குறிப்பிட்டு எங்களுக்கு தெரிவித்தால் நாங் கள் வந்து எடுத்துக்கொண்டு போவோம். மற்றபடி நீங்களே எடுத்து அனுப்பலாம். உங்கள் பக்கத்து பஞ்சாயத்து யூனியன் விவசாய விஸ்தரிப்பு அலுவலர், கிராம சேவக் முதலியவர்களிடமும் இதைப் பற்றி கலந்து ஆலோசித்து அவர்கள் மூலமும் நீங்கள் மண் எடுத்து அனுப்பலாம்.

நாட்டாண்மைக்காரர்.—நாங்களே மண் எடுத்து அனுப்பறதுன்னு எப்படிங்க எடுத்து அனுப்பனும் ?

மண் பரிசோதனை உதவியாளர்.—மண் பரிசோதனைக்கு அறுவடை முடிந்த பிறகு அல்லது உரமிடுவதற்கு முன்பு மண் எடுக்க வேண்டும். ஒரே நிலத்தில் இடத்துக்கு இடம் உர அளவு மாறுபடுமாதலால் சுமார் பத்து இடங்களில் பரவலாக மண் சேகரிக்க வேண்டும். நிலத்துக்கு மேலேயுள்ள சருகு, செத்தை முதலிய கழிவுகளை நீக்கி விட்டு, மண் வெட்டியால் ஆறு அங் குலம் முதல் ஒன்பது அங்குலம் வரையுள்ள மண்ணை நீக்கவும். பிறகு மண் வெட்டியின் தகட்டை வெட்டிய குழியின் ஓரமாக வைத்து மேலிருந்து கீழ்வரை ஒரே சீராக அரை அங்குலம் கனமுள்ள மண்ணை எடுத்து ஒரு பாத்திரத்தில் போடவும். இதே போல் ஒரே நிலத்தில் சேகரித்த எல்லா மண்ணையும் ஒன்றாகக் கலந்து, அதில் ஒரு ராத்தல் மண்ணை ஒரு பையில் போட்டு ஒரு தாளில் அந்த நிலத்தைப் பற்றிய விவரங்களையும், அடுத்து வரும் பயிர், அதற்குரிய பாசன வசதிகள் முதலிய விவரங்களையும் எழுதி அப்பையில் போட்டு மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்.

நாட்டாண்மைக்காரர்.—நாங்க அனுப்பிய மண்ணை நீங்க எந்த மாதிரி பரிசோதனை செய்கிறீங்க ?

மண் பரிசோதனை உதவியாளர்.—பயிருக்கு முக்கியமாக மூன்று உணவுச் சத்துக்கள் பெருமளவில் தேவைப் படுகின்றன. அவை நைட்ரஜன் என்ற தழைச்சத்து, பாஸ்பாரிக் அமிலம் என்ற தானியச்சத்து, பொட்டாசியம் என்ற சாம்பற் சத்து முதலியவையாகும். இம்மூன்றும் சரியான அளவில் இருந்தால்தான் பயிர் நல்ல விளைச் சலைக் கொடுக்கும். இம்மூன்றும் எந்த அளவில் இருக் கிறது என்று பரிசோதனை மூலம் தெரியவருகிறது. பின் அதற்கு ஏற்றவாறு அந்த நிலத்திற்கு எவ்வளவு உரம் தேவை என்று சிபாரிசு செய்கிறோம். இந்த ரசா யன உரங்களைத் தவிர நீங்கள் உங்கள் வீட்டுத் தொழு உரங்களையும், தக்கைப்பூண்டு, சணப்பை போன்ற பசுந் தாளுரங்களையும் போட வேண்டும்.

நாட்டாண்மைக்காரர்.—உரப்பரிசோதனைக்குப் பின் நீங்க எங்களுக்கு எந்த முறையில் உர சிபாரிசு செய்கிறீங்க ?

மண் பரிசோதனை உதவியாளர்.—பொதுவாக மண்ணிலுள்ள உரச்சத்துக்களின் அளவுகளை பல பரிசோதனைகளின் மூலம், மிகக் குறைவு, குறைவு, சுமார், அதிகம் என்று குறித்துக் கொள்கிறோம். உதாரணமாக இப்பொழுது உங்கள் நிலத்தில் தழைச்சத்தை குறைவாக இருந்தால் அதற்கு ஏற்றவாறும், சுமாரான அளவில் இருந்தால் அதற்கு தகுந்தவாறும் சிபாரிசு செய்வோம். இதே போன்றுதான் மற்ற சத்துக்களுக்கும் சிபாரிசு செய்கிறோம். உங்கள் நிலம் ஒரு குறிப்பிட்ட சத்தை அதிகமாகக் கொண்டிருந்தால், அந்த சத்தைத் தவிர மற்ற சத்துக்களைப் போடுமாறு கூறுகிறோம். ஒரு நிலத்தில் ஒரு சத்து போதிய அளவில் இருந்தால் அதே சத்தை மேலும் போடுவதனால் பலன் ஒன்றும் கிடையாது. மண் பரிசோதனை செய்து அதற்கு ஏற்றவாறு உரங்களை இடுவது சிக்கனமான முறையாகும்; நல்ல மகசூலும் கிடைக்கும். எதையும் விஞ்ஞான முறையில் செய்வதே சாலச் சிறந்தது.

நாட்டாண்மைக்காரர்.—தழைச்சத்து, தானியச் சத்து, சாம்பற்சத்து இவை என்னென்ன இரசாயன உரங்களில் இருக்க, அவைகளை எந்த விதத்தில் உபயோகிக்க வேண்டும் என்று சொல்லும்படி கேட்டுக்கிறேன்.

மண் பரிசோதனை உதவியாளர்.—இது ஒரு முக்கியமான கேள்வி. இந்த விஷயத்தை ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அமோனியம் சல்பேட், அமோனியம் சல்பேட் நைட்ரேட், அமோனியம் பாஸ்பேட், யூரியா போன்ற உரங்கள் தழைச்சத்துள்ள இராசயன உரங்கள், சூப்பர் பாஸ்பேட்டு, எலும்புத்தூள், ராக் பாஸ்பேட், அமோனியம் பாஸ்பேட் போன்ற உரங்கள் தானியச் சத்துடைய உரங்கள் சல்பேட் ஆஃப் பொட்டாஷ், மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் என்ற உரங்கள் சாம்பல் சத்துள்ள இரசாயன உரங்கள். பரிசோதனை நிலையத்திலே உங்கள் நிலத்துக்கு அமோனியம் சல்பேட்டை போடச் சொல்லியிருந்தால் அதைப் போட வேண்டும். அது கிடைக்காவிட்டால் அதே சத்தையுடைய யூரியா போன்ற இதர உரங்களை இடலாம். இது போன்றுதான் மற்ற உரங்களுக்கும். ஒரு உரம் கிடைக்காவிட்டால் அதே சத்தையுடைய மற்ற உரங்களை இடலாம். ஆனால் ஒவ்வொரு சத்தும் ஒரு குறிப்பிட்ட உரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தான் இருக்கிறது. உதாரணமாக 100 ராத்தல் அமோனியம் சல்பேட்டில் 20 ராத்தல் தழைச்சத்து உள்ளது. ஆனால் அதே சத்து யூரியாவில் 100-க்கு 44 லிருந்து 46 ராத்தல் உள்ளது ஆகவே இப்போது ஒரு நிலத்துக்கு 100 ராத்தல் அமோனியம் சல்பேட் போட வேண்டுமானால் அதற்கு பதிலாக அதே நிலத்துக்கு சுமார் 45 ராத்தல் யூரியா போட்டால் போதுமானதாயிருக்கும். ஆகவே உரமிடும் பொழுது அதிலுள்ள உணவு சத்தின் அளவையும் தெரிந்து போடுவது நல்லது. இதுபற்றிய விவரங்களை நீங்கள் பஞ்சாயத்து யூனியன் விவசாய டிப்போக்களில் உரங்கள் வாங்கும் பொழுது, அங்குள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வளவு நேரம் நிகழ்ந்த உரையாடலிலிருந்து நீங்கள் மண் பரிசோதனை விவரங்களையும், அதன் அவசியத்தையும் பற்றி நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் தங்கள் மண்ணை பரிசோதனை செய்து அதற்கேற்ற சிபாரிசுகளைநடைமுறையில் கையாண்டு பலன்காண வேண்டும். எல்லா நிலங்களையும் பரிசோதனை செய்து பார்க்காவிட்டாலும், முதலில் ஒரு நிலத்தை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, ஒரு பகுதியில் நீங்கள் வழக்கம் போல் செய்யும் முறைகளையும் மற்றொரு பகுதியில் பரிசோதனை நிலையத்தில் சிபாரிசு செய்த முறைகளையும் செய்து பார்த்து இரண்டிலும் வரும் மகசூலைக் கணக்கிட வேண்டும். அப்பொழுதுதான் எது லாபகரமானதென்று உங்களுக்குத் தெரியும். ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்து நிலத்திலுள்ள தீய சத்துக்களைப் போக்கி, தேவையான உரங்களை தக்க சமயத்தில் போட வேண்டும். மேலும் நோய், பூச்சி முதலியவைகளிலிருந்து பயிரைக் காக்க வேண்டும். இவ்வாறு செய்து மகசூலைப் பெருக்கி நாடு சுபிட்சமடையப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

(ஊர் நாட்டாண்மைக்காரர், மண் பரிசோதனை உதவியாளருக்கு நன்றி தெரிவிக்கிறார். அத்துடன் கூட்டம் கலைகிறது.)

கன்று பிறந்தபின் உறுப்பு வெளித்தள்ளாமல் தேங்கிய நிலைமை

காலநடை பராமரிப்புத் துறை நெறியாளர், சென்னை.

கன்றுகளின் பிரசவகாலத்தில் முதலில் பனிக்குடம் உடைந்து நீர் வெளிவரும். இதைத் தொடர்ந்து கன்று வெளிவரும். சிறிது நேரத்தில் கருப்பையில் கன்றைத் தாங்கி வந்த உறுப்பு (placenta) வெளி தள்ளப்படும், பொதுவாக தம் நாட்டிலுள்ள பசுக்களிலும் எருமை களிலும் அரைமணியிலிருந்து 9 மணிக்குள் உறுப்பு வெளி வந்துவிடும், ஆனால் சில சமயங்களில் இவ்வுறுப்பு இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் வெளிவருவதில்லை. இந்நிலைமைக்குத்தான் உறுப்பு வெளித்தள்ளாமல் தேங்கிய நிலைமை (retained placenta) என்று பெயர். மாடுகளில் வளரும் கருவுக்கும் கர்ப்பப்பையிற்கும் இடையே அமைந்துள்ள திட்டுக்கள் போன்ற (cotyledons) அமைப்பு களில் ஏற்படும் கோளாறுகளே இந் நிலைமை நீடிப்பதற்கு காரணமாயிருக்கிறது.—

இந்நிலைமை ஏற்படுவதற்கு பின் கண்டவைகளே முக்கிய காரணங்களாகும்.

(1) கிருமிகளால் தாக்கப்பட்டு குறைப்பிரசவங்கள் ஏற்பட்ட மாடுகளில் இந்நிலமை ஏற்படுகிறது. எப்படி யெனில் கிருமிகள் கருவின் மேலுள்ள பைகளை தாக்கி, திட்டுக்களை இறுகச் செய்து பிரசவத்தின்பொழுது இத் திட்டுக்கள் எளிதில் பிரிய முடியாத நிலமையை எற் படுத்துகிறது.

(2) பசுக்கள் மெலிந்திருத்தல், கஷ்டமான பிரசவங் களைத் தொடர்ந்து கருப்பையின் சுவர்கள் வலிவிழந்து இயக்கமில்லாமல் இருத்தல்.

(3) கர்ப்பத்தின் கடைசி காலங்களில் புரதம், உயிர்ச் சத்து 'ஏ' தாதுப்பொருள்கள் முதலியவை உணவில் சரியான அளவில் சேர்க்கப்படாமலிருத்தல், பசுக்களுக்கு சரியான அளவு சத்துக்கள் நிறைந்த தீவனம் கொடுக் கப்படாதிருத்தல்.

(4) கர்ப்ப காலத்தில் பசுக்களுக்கு சரியான உடற் பயிற்சி இல்லாமை.

(5) வம்சாவளி இயல்பு.

பசுக்களுக்கு மேய்ச்சல் வசதி போதுமான அளவு இருந்தால் இந்நிலைமை அதிகம் ஏற்படுவதில்லை. ஏனெனில் பசுக்கள் மேயும்பொழுது சத்துள்ள பசும்புல் போதிய அளவு கிடைப்பதுடன் உடற்பயிற்சியும் கிடைக் கின்றது. நகரப்புறங்களிலுள்ள பசுக்கள் பெரும்பாலும் தொழுவத்திலேயே இருப்பதால் அவைகளுக்கு சரியான உடற்பயிற்சி கிடைப்பதில்லை. சூரிய வெளிச்சமும் படுவ தில்லை. இதனால் இப்பசுக்களில் இந்நிலைமை (Retained placenta) அதிகமாக ஏற்படுகின்றது.

என்ன செய்யவேண்டும்?

கன்று பிறந்த ஒன்பது மணி நேரம் ஆகியும் உறுப்பு வெளித்தள்ளாவிட்டால் சற்று கவனமுடன் இருக்க வேண்டும். 24 மணி நேரம் வரையிலும் பொறுத்திருக் கலாம். அதற்கு மேல் கால் நடை மருத்துவரின் உதவியை உடனே நாடவேண்டும். தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவ ரல்லாத நாட்டு வைத்தியர்களிடம் சென்றால் மேலும் நிலமை மோசமாக்கப்பட்டு பசு மலடு ஆகும்படி நேரிட லாம்; சில சமயங்களில் பசுவின் உயிருக்கே ஆபத்து நேரலாம்.

கன்று பிறந்த பிறகு கருப்பையும் அதனைச் சார்ந்த உறுப்புக்களும் வெளிப்பட்டு தொங்குமானால் வெளியி லுள்ள கிருமிகள் அவைகளைத் தாக்கி நோய் ஏற்படுத்து வதற்கு சாதகமாகின்றது. எனவே மாட்டுத்தொழுவங்களை மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பசுவின் பின்பாகங்களை கிருமி நாசினிகளைக் கொண்டு சுத்தம் செய்துவிடவேண்டும், கருப்பையின் பாகங்களை மஞ்சள் தூள், வேப்பெண்ணெய் இவைகளைக்கொண்டு தடவி, கிருமிகள் புகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

24 மணி நேரத்திற்கு மேற்பட்டு வெளிவராமல் இருக்கும் உறுப்பை, தக்க கால்நடை மருத்துவரைக் கொண்டு வெளியில் எடுக்கவேண்டும், எடுத்த பிறகு கிருமிநாசினி மருந்துகளை கர்ப்பப்பையிற்குள் செலுத்து வதுடன், வாய் வழியாகவும் மருந்து கொடுக்கவேண்டும் இந்த சிகிச்சை மூலம் வெகு சீக்கிரத்தில் கர்ப்பபை சாதாரண நிலைமை அடைந்துவிடும். ஆனால் சரிவர கவனிக்கப்படாத அல்லது சீரான முறை யில் உறுப்பு எடுக்கப்படாத மாடுகளில் கர்ப்பப்பையில் இரணம் ஏற்பட்டு, சீழ்பிடித்து வியாதியை உண்டாக்கு வதுடன் சில சமயங்களில் விஷம் அதிகமாகி பசுக்கள் இறக்க நேரிடும். இச் சமயங்களில் கால்நடை மருத்து வரின் தனிக்கவனம் வேண்டும்.

நாட்டுப்புறங்களில் கன்றுகள் பிறந்ததும் சாதாரண மாக மூங்கில் இலைகளையும் வெண்டைக்காய்களையும் கொடுப்பது வழக்கம். இதனால் கர்ப்பப்பையின் உறுப்பு நன்கு வெளியேற்றப்பட்டு, எளிதில் சுருங்கும். சில இடங்களில் தூளாக்கப்பட்ட அரிசி, கம்பு இவற்றை வெல்லத்துடன் கலந்து கொடுக்கிறார்கள். இம்முறையும் உடல் நலத்திற்குச் சிறந்ததே. இம்முறைகளை யாவரும் எளிதில் கையாளலாம்.

மகிழ்ச்சியான வைபவங்களை மேலும் ஆனந்தமாக்குங்கள்

நல் வாழ்த்துக்கள் அல்லது மகிழ்ச்சிச் செய்திகள் அனுப்பு வேண்டுமா?...அவைகளை ஒரு வாழ்த்துத் தந்தி மூலம் அனுப்புங்கள்.

வாழ்த்துத் தந்திகள் விசேஷ படத்துடன் கூடிய பாரத்தில் எழுதப்பட்டு கவர்ச்சியான வர்ணக் கவரில் போட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

சொந்தம் அல்லது பொதுக்காரியம் போன்ற எல்லா சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற பலவித வாழ்த்து வாக்கியங்கள் இருக்கின்றன. அவைகளிலிருந்து ஒன்றை பொருக்கி எடுக்கலாம்.

சாதாரண வாழ்த்துத் தந்தி அனுப்புவதற்கு குறைந்தபக்ஷ கட்டணம் 75 பைஸே. பிறகு ஒவ்வொரு கூடுதல் வார்த்தைக்கும் 10 பைஸே.

டீ லக்ஸ் தந்தி வசதி

மிகவும் அன்னியோன்ய பாவத்துடன் செய்தி அனுப்ப டீ லக்ஸ் தந்தி உள்ளது. உங்கள் விருப்பப்படி தந்தியின் வாக்கியத்தை எழுதுங்கள்,

விசேஷ குறிப்புகள் என்ற இடத்தில் "டீ லக்ஸ்" என்று குறிப்பிடவும். தந்தி விசேஷ வாழ்த்து பாரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

வாழ்த்துக்கள் அல்லது டீ லக்ஸ் தந்திகள் என்று குறிப்பிடவும்

தபால் தந்தி இலாகா

DA 64/487

1964-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை

சி. சுப்ரமணியன், ஜி. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோவை-3.

இம்மாதத்தில் முதல் 22 நாட்களில் தமிழகத்தில் பொதுவாக வரட்சியே நிலவியது. ஆனால் 2, 7ம்தேதி களில் சிற்சில இடங்களில் மட்டும் மழை பெய்தது. 23-ம் தேதி வீசிய கடும் புயற்காற்றாலும், பெருத்த மழை யாலும், கடற் கொந்தளிப்பாலும் இராமனாதபுரம், மதுரை மாவட்டங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளிலும் உள்ள பல ஊர்களில் பயிர்கள் நாசமடைந்தன. ராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிகள் இப்புயற் காற்றாலும் கடற் கொந்தளிப்பாலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. ராமேஸ்வரத்தின் ஒரு பகுதி கடல் கொந்தளிப்புக்கு இரையாகியது. இம்மாதம் 25-ம் தேதி தமிழகத்தின் உட்பகுதிகளில் ஆங்காங்கும், கடற்கரைப் பகுதிகளில் சிற்சில இடங்களிலும் மழை பெய்தது. 26-ம் தேதியன்று தமிழகத்தின் வட பகுதிகளில் ஆங் காங்கும் தென் பகுதிகளில் சில இடங்களிலும் மழை பெய்தது. 27-ம் தேதியன்று தமிழகம் முழுவதும் சிற் சில இடங்களில் மழை பெய்தது. 28-ம் தேதியன்று வரண்ட நிலையே நிலவியது. 29-ம் தேதியன்று இலே சான மழையும், இம்மாதத்தின் கடைசி இரு நாட்களில் வரட்சி நிலையும் நிலவியது.

இந்த மாதத்தில் இரவு வெப்ப நிலையில் மாறுதல் கள் காணப்பட்டன. 21, 27 தேதிகளில் சராசரிக்கு அதிகமாகவும் 8, 15, 20, 28 தேதிகளில் சராசரிக்கு குறைவாகவும் இரவு வெப்ப நிலை இருந்தது. ஏனைய நாட்களில் சீராகவேயிருந்தது.

கால நிலையும், பயிர் வளர்ச்சியும்

இந்த மாதம் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் னாற்காடு மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்ய வில்லை. திரூர் குப்பம் பகுதிகளில் நிலவிய மப்பு மந்தார சூழ்நிலையும் இடைவிடாத மழைத் தூரல்களும் நெல் அறுவடைக்கு தடங்கலாக இருந்தது. இப்பகுதிகளில் கோ. 30 நெற் பயிரிலும், வேறு சம்பா பயிர்களிலும் சிறிதளவு குருத்துப் பூச்சிகளும், இலைப்புள்ளி நோயும் காணப்பட்டன. குடியாத்தம் பகுதிகளில் கரும்பில் கரும் பூட்டை நோய் (smut) சிறிதளவு காணப்பட்டது. போளூர் பகுதிகளில் சற்று அதிகமான மழை பெய் திருக்கிறது. நவரை நெற்பயிருக்கும், ராகிப் பயிருக்கும நாற்றங்கால்கள் போடவும், கொள்ளு விதைக்கவும், இம் மழை உதவியது. ஆனால் நிலக்கடலையை காய வைப் பதற்கும், அறுவடை செய்யவும், சம்பா நெல் அறுவடை செய்யவும் இம்மழை இடையூறாயிற்று. இங்கு நெற் பயிரை நாவாய்ப் பூச்சிகளும், குருத்துப் பூச்சிகளும் மித மாகத் தாக்கின. கத்திரியில் புள்ளி வண்டுகளும், துளைப் பான்களும் தக்காளியில் துளைப்பான்களும் காணப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் அதிக மாக வீசிய புயற்காற்றாலும், மழையாலும் பயிர்கள் பெரிதும் நாசமடைந்தன. ஆனால் எஞ்சிய பகுதிகளில் பெய்த மழையினால் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலங்களில் நெற்பயிர் பெரிதும் பயனடைந்தது. ஆடுதுறைப் பகுதி யில் சம்பா நெல் இம்மழையால் பயனடைந்தது. இங்கு நெற்பயிரில் குருத்துப் பூச்சிகளும், ஆனைக்கொம்பன் களும், இலை சுருட்டும் பூச்சிகளும், இலைப்புள்ளி நோயும் மிதமாகக் காணப்பட்டன. பட்டுக்கோட்டை பகுதியில் 23-ம் தேதி வீசிய கடுங்காற்றால் சம்பா நெற்பயிர்கள் முழுவதும் தலை சாய்ந்தன. சில பழ மரங்களும் தீமை யடைந்தன. இங்கு ஆடுதுறை 8 நெற்பயிரில் கற்றாளைப் பூச்சிகள் (mealy bug) சிறிது காணப்பட்டன. இம் மாவட்டத்தின் சில பகுதிகளில் நிலக்கடலை அறுவடை செய்யவும் இம்மழை உதவி புரிந்தது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், பெய்த மழையும், சுமார் மூன்று லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள நெற் பயிர்களுக்கு ஏற்றதாயிற்று. கரூர், அரியலூர் பகுதி களில் நிலக்கடலை அறுவடையாயிற்று. சில பகுதிகளில் சம்பா நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. சேலம் மாவட்டத்தில் சற்று அதிக மழை பெய்துள்ளது. ஆத் தூர் பகுதிகளில் பெய்த மழை நெல் அறுவடைக்கும், ராகி நடவுக்கும் உகந்தாதாயிற்று. நாமக்கல் பகுதிகளில் சம்பா நெல், நிலக்கடலை முதலியன அறுவடைக்கு வந்தன. திருச் செங்கோடு, சங்கரி பகுதிகளில் ராகி, கார் நெல், வெங்காயம் முதலியன நடவுக்கு வந்தன. இங்கு நெற்பயிரில் நாவாய்ப்பூச்சிகளும், கதிர் வண்டு களும், குருத்துப் பூச்சிகளும் ராகி பயிரில் வெட்டுப் புழுக் களும் பருத்தியில் நாவாய்ப் பூச்சிகளும், அசுக்களும், காய் வண்டுகளும், திரிப்ஸும் சிறிதளவு காணப்பட்ட தாகத் தெரிகிறது.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இம்மாதம் 22, 23 தேதிகளில் வீசியகடும் புயலினாலும், பெருத்த மழையினாலும் ஆயிரக் கணக்கான ஏக்கர்களில் சாகுபடி யான பல விவசாயப் பயிர்களும், பழ மரங்களும், தோட்டக்கால் பயிர்களும் வெகுவாக சேதமடைந்தன. சிவகங்கை, திருவாடானை, பரமக்குடி, மற்றும் கொட்டாம் பட்டி, திண்டுக்கல், சின்னாளப்பட்டி, அரந்தாங்கி முதலிய பகுதிகள் புயலால் சேதமடைந்தன.

உசிலம்பட்டி பகுதியில் இம்மாதம் பெய்த மழையினால் எள்ளு, காய்கறிப்பயிர்கள் மற்றும் பல சிறுதானியப் பயிர்கள் பயனடைந்தன. ஆனால் இங்கு நெற்பயிரில் சிறிது கொள்ளை நோயும், நாவாய்ப் பூச்சிகளும், ராகியில் பெருமளவு கொள்ளை நோயும் காணப்பட்டன.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் இம் மாதம் குறைவான மழைதான் பெய்தது. கோவில் பட்டி பகுதியில் நிலவிய வரண்ட சூழ்நிலை கம்பு பயிரை பாதித்தது. இங்கு பருத்தியில் கருங்கிளை நோயும், காய்ப் புழுக்களும் மிதமாகவும் ரஷ்யன் பருத்தியில் மிக அதிக மான நாவாய்ப் பூச்சிகளும், மிளகாயில் மிதமாக திரிப் ஸும், வைரஸும் (virus) சோளப் பயிரில் மிதமான அளவு கதிர் வண்டுகளும், இலைப்புள்ளி நோயும் பச்சைப் பயிரில் பெருமளவு நாவாய் பூச்சிகளும், கொத்துக் கடலையில் மிக அதிகமாக பச்சைப் புழுக்களும் காணப் பட்டன சங்கரன்கோவில் பகுதியில் பெய்த மழை

நெல், பருத்தி மிளகாய்ப் பயிர்களுக்கு உதவியது. ஆனல் இங்கு நெற் பயிரில் திரிப்ஸும் குருத்துப் பூச்சிகளும் அதிகமாக பரவியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையின்மையால் நிலக் கடலேப் பயிர் வாட்டமுற்றது. இங்கு வீசிய பலத்த காற்றுகளினல் மாமரத்தில் அதிகமாக சேதம் ஏற்பட்டது. மாமரத்தை துளேப்பான்களும் கொய்யாவை வண்டு களும் இலேசாக தாக்கின.

கோவை மாவட்டத்தில் பெய்த மழையால் கரும்பு, நெல், பருத்தி சோளம் முதலியன நன்மையடைந்தன. இங்கு பருத்திகள் தத்துப் பூச்சிகளும், குருத்துப் பூச்சி களும், காய்ப் புழுக்களும், இலேப் பேனும் சிறிதளவு காணப்பட்டன. தத்துப் பூச்சிகளும், குருத்துப் பூச்சி களும் நெற் பயிரைத் தாக்கின. ஆழியார் பகுதிகளில் பெரும் மழையால் நெற்பயிர்கள் தலே சாய்ந்தன. இங்கு நிலக்கடலேயையும், பருத்தியையும் இலேப் பேன்கள் தாக்கின. சிறிதளவு குருத்துப் பூச்சிகள் நெற் பயிரிலும் டிக்கர் இலேப்புள்ளி நோய் நிலக்கடலேயிலும் காணப் பட்டன.

உதகை மாவட்டத்தில் அதிகமான மழை பெய்து இருக்கிறது. இம் மழை பொதுவாக எல்லா செடி, கொடி, மரங்களுக்கும் உகந்து இருந்தது. நன்செய் நாடு பகுதி களில் இம் மழை கோடை கால உருளேக் கிழங்கு நிலங்கள் தயாரிக்க உதவியது. ஆனல் இங்கு நிலவிய கடுமையான மூடுபனியினல் உருளேக் கிழங்குப் பயிர்கள் பெரிதும் சேதம் அடைந்தன. இரண்டாம் போக உருளேக் கிழங்கின் மாசூலே இம் மூடு பனி வெகுவாக குறைத்து விட்டது.

இம் மாதத்தில் பெய்த குறிப்பிடத்தக்க மழை அளவு களும் பிராந்திய மழை அளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழை (அங்குலத்தில்).

எண் (1)	தேதி (2)	இடத்தின் பெயர் (3)	மழையளவு (4)
1	24–12–1964	பாலூர்	3·40
2	24–12–1964	ஆழியார் நகர் ..	3·07
3	24–12–1964	மதுரை	9·06
4	24–12–1964	சிவகங்கை	5·12
5	24–12–1964	கொடைக்கானல் ..	7·32
6	24–12–1964	நஞ்சநாடு	3·02
7	24–12–1964	ஊட்டி	4·75
8	24–12–1964	குன்னூர் ..	6·72*

* 25–12–1964-ம் தேதி 4·32 அங்குலம் பெய்தது.

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்).

எண் (1)	பிராந்தியத்தின் பெயர் (2)	டிசம்பர் மாத மழை அளவு (3)	சராசரி யிலிருந்து மாறுபாடு (4)	குறிப்பு (5)
1	வட பிராந்தியம்.	0·9	—2·4	மிகக்குறைவு
2	கிழ்கரைப் பிராந்தியம்	4·3	—3·0	ஷ
3	மத்திய பிராந்தியம்	2·3	—5·0	ஷ
4	தென் பிராந்தியம்	2·0	—1·2	குறைவு.
5	மலேப் பிராந்தியம்	8·6	+4·8	அதிகம்.

இடத்தின் பெயர் (1)	இம்மாத மொத்த மழை யளவு (2)	சராசரியி லிருந்து மாறுபாடு (3)	ஜனவரி 1ம்தேதி முதல் மொத்த மழை யளவு (4)
(மழையளவு அங்குலத்தில்)			
வட பிராந்தியம்.			
சென்னே (மீனம்பாக்கம்) ..	0·7	—4·8	47·0
திரூர்குப்பம் *	0·5	—3·3	43·7
வேலூர்	1·5	—1·1	52·2
குடியாத்தம் *	1·0	—0·3	43·5
கிழகரை பிராந்தியம்.			
பாலூர் *	4·1	—1·5	45·1
திண்டிவனம் *	5·7	—1·4	49·3
கடலூர்	3·3	—4·2	33·7
நாகபட்டினம்	3·2	—7·8	37·4
ஆடுதுறை *	6·1	—0·4	30·3
பட்டுக்கோட்டை *	3·1	—2·9	28·5
மத்திய பிராந்தியம்.			
சேலம்	1·5	+0·5	60·4
சேலம் *	1·8	+0·6	60·3
கோயம்புத்தூர் *	2·1	—0·2	28·7
கோயம்புத்தூர்	2·3	+1·3	31·4
ஆளியார் நகர் *	3·6	+1·2	34·0
திருச்சிராப்பள்ளி	2·3	—0·3	34·2
தென் பிராந்தியம்.			
மதுரை	10·2	+8·2	42·1
பாம்பன் †	..	..	..
கோவில்பட்டி *	0·3	—2·2	33·6
பாளேயங்கோட்டை	0·2	—4·0	26·3
அம்பா சமுத்திரம் *	0·8	—5·3	24·2
நாகர்கோயில் *	0·1	—2·2	29·8
கன்னியாகுமரி *	0·2	—1·8	16·1
மலேப் பிராந்தியம்.			
கோடைக்கானல்	9·2	+4·1	66·3
கூனூர் *	13·0	+7·5	59·5
உதகமண்டலம் *	7·2	+4·9	75·6
நஞ்சநாடு	5·0	+2·8	79·0

* சென்னே விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணேகள்.

† இங்கு 23—12—1964-ல் வீசிய புயற்காற்றுலும், பெருமழையாலும் தக்க புள்ளி விவரங்கள் பதிவாக வில்லே.

1965-ம் ஆண்டு ஜனவரி மாத வர்த்தகப் பயிர்களின் விற்பனை நிலைமை விவரம்.

மாநில வர்த்தக அலுவலர், சென்னை.

வர்த்தக நிலைமை :

சென்னை மாநிலத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த பருத்தி லிண்ட விவரங்களாவன :—

[எடையளவு : குவிண்டலில்]

வரிசை எண்	விற்பனைக் கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
(அ)	கம்போடியா கப்பாஸ்—				
1.	பொள்ளாச்சி	100	7,000	6,000	1,100
2.	திருப்பூர்	14,043	9,362	12,506	10,899
3.	உடுமலைப்பேட்டை	..	..	..	..
4.	சூலூர்	..	..	..	..
5.	அவனாசி	..	..	..	..
6.	சென்னிமலை	870	900	970	800
7.	பெருந்துரை	150	600	650	100
8.	கோவை	4,100	2,250	2,000	4,350
9.	அன்னூர்	..	..	..	..
10.	கோபி	..	..	..	..
(ஆ)	கருங்கண்ணி கப்பாஸ்—				
1.	உடுமலைப்பேட்டை	..	..	..	..
2.	சாத்தூர்	450	..	..	450
3.	இராசபாளையம்	..	..	..	..
4.	விருதுநகர்	..	500	500	..
5.	கோவில்பட்டி	..	..	..	..
6.	சூலூர்	200	7,000	6,000	1,200
(இ)	உகாந்தா கப்பாஸ்—				
1.	விருதுநகர்	..	..	..	..
2.	சாத்தூர்	..	..	..	..
3.	இராசபாளையம்	5,000	2,000	4,000	3,000
4.	சங்கரன்கோயில்	..	..	..	..
(அ)	கம்போடியா லின்ட்—				
1.	பொள்ளாச்சி	340	600	500	440
2.	திருப்பூர்	25,803	5,263	9,918	21,148
3.	உடுமலைப்பேட்டை	..	..	..	..
4.	சூலூர்	130	1,200	1,100	230
5.	கோவை	2,250	2,000	1,750	2,500
6.	புளியம்பட்டி	..	..	..	..
7.	ஈரோடு	1,400	1,100	1,200	1,300
8.	கோபி	40	40	45	35
9.	சென்னிமலை	900	650	700	850
10.	அவனாசி	..	..	..	..
11.	பவானி	25	30	30	25
12.	பெருந்துறை	20	..	20	..
(ஆ)	கருங்கண்ணி லின்ட்—				
1.	விருதுநகர்	360	140	140	360
2.	சாத்தூர்	..	..	..	..
3.	இராசபாளையம்	..	..	..	..



"ஆஸ்பி போலோ"

முதன் முதலாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட "ஆஸ்பி போலோ" யந்திரம், சிக்கனமாகவும், சக்தி வாய்ந்த தாகவும், துரிதமாகவும் உபயோகித்து பயிர் பூச்சிகளையும், பயிர் நோய்களையும் கட்டுப்படுத்தக்கூடியது.

மோட்டாரினுல் இயங்கும் முதுகில் சுமந்து செல்லக் கூடிய பனி தெளிப்பு குழலுடன்கூடிய டஸ்டர்.

மூன்று குதிரை சக்தி கொண்ட, நிமிஷத்துக்கு 6000 சுழற்சியுடைய விசையினுல் இயங்கக்கூடிய, ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட சோலோ யந்திரத்துடன் கூடியது.

வெகு சுலபமாக பனி தெளிப்பு குழலை டஸ்டராகவும் மாற்றிக்கொள்ளக்கூடியது.

தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
மாலாடு, பம்பாய்–64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன்,
த. பெ. எண் 539, பெங்களூர்–2.

வரிசை எண்.	விற்பனைக்கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
(ஆ)	கருங்கண்ணி லின்ட்—தொடர்ச்சி.				
4.	கோவில்பட்டி	..	..	..	..
5.	உடுமலைப்பேட்டை	..	..	..	..
6.	திருப்பூர்	..	55	..	55
(இ)	உகந்தா லின்ட்—				
1.	சங்கரன் கோவில்	..	..	..	..
2.	விருதுநகர்	..	..	..	..
3.	சாத்தூர்	..	..	..	..
4.	இராசபாளையம்	5,440	1,120	1,360	5,000

வர்த்தக நிலைமை :

பொதுவாக பருத்தியின் விளைவு காலம் முடிவுற்றமையால் வரத்துகள் மிகவும் குறைவாகக் காணப்பட்டன.

விருதுநகர் விற்பனைக் கூடத்தில் பருத்தி விதையின் விலைப் பட்டியல்

[விலைகள் குவிண்டலுக்கு ரூ.]

வரிசை. எண்.	வகை.	கருங்கண்ணி.	உகந்தா.
(1)	(2)	(3)	(4)
1.	சிறந்தவை ..	60	62
2.	சாதாரணமானவை ..	58	60
3.	மட்டமானவை	..	56

விலைபோக்கு :

மார்க்கெட்டில் வரவுகள் இன்மையாலும் இருப்பு குறைவாலும் நல்ல பிரிமியமும் சேர்ந்து பருத்தி விதை விலைகள் உயர்வை உண்டுபண்ணியது.

சில முக்கிய சந்தைகளின் இம்மாத பருத்தி, பஞ்சு விலைப்பட்டியல்

[விலைகள் குவிண்டலுக்கு ரூ.]

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்.	கருங்கண்ணி.		கம்போடியா.		உகந்தா.	
		பருத்தி.	பஞ்சு.	பருத்தி.	பஞ்சு.	பருத்தி.	பஞ்சு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	கோவை	..	..	155 00	330 00	..	..
2.	திருப்பூர்	..	..	175 00	330 00	..	..
3.	சூலூர்	..	..	176 00	380 00	..	..

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்.	கருங்கண்ணி		கம்போடியா		உகந்தா	
		பருத்தி.	பஞ்சு.	பருத்தி.	பஞ்சு.	பருத்தி.	பஞ்சு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
4.	வெள்ளக்கோவில்	..	..	..	..	..	..
5.	ஈரோடு	..	..	145	420	..	..
6.	பெருந்துறை	..	..	110	320	..	—
7.	பொள்ளாச்சி	..	..	184	380	..	..
8.	பவானி	..	..	150	395	..	..
9.	தாராபுரம்	..	..	..	..	..	..
10.	உடுமலைப்பேட்டை	..	..	..	..	..	..
	இராமநாதபுரம் மாவட்டம்—						
1.	சிறந்தவை	119 —121	340	..	..	140 —160	411 —423
2.	சாதாரணமானவை	109 —117	296	..	..	120 —135	..
3.	மட்டமானவை	97	..	..	..	80 —100	..

விலைப்போக்கு :

இருப்புக் குறைவாலும், வரவுகள் இன்மையாலும், நல்ல பிரியத்தாலும் பஞ்சு, பருத்தியின் விலைகள் ஸ்த்திரமாகவே நிலவியது.

நிலக்கடலை

விற்க வந்தவையும், விற்கப்பட்டவையும்

வரிசை எண்	விற்பனைக் கூடத்தின் பெயர்	ஆரம்ப இருப்பு	விற்பனைக்கு வந்தவை	விற்பனையானவை	இறுதி இருப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
I	**முழுக்கடலை—**				
1.	வட ஆற்காடு	9,950	15,500	17,200	8,250
2.	திருச்சி	..	..	..	..
3.	கோவை	2,850	9,990	7,250	5,590
4.	இராமநாதபுரம்	2,000	8,000	8,000	2,000
II	**பருப்பு—**				
1.	தென்னாற்காடு	41,014	45,444	52,669	33,789
2.	திருச்சி	3,100	23,848	24,848	2,100
3.	வட ஆற்காடு	20,650	35,500	3,900	17,150
4.	கோவை	1,100	3,450	3,500	1,050
5.	இராமநாதபுரம்	3,800	6,000	5,000	3,800

வர்த்தக நிலைமை :

பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் எண்ணெயின் விலை சற்று வீழ்ச்சியுற்றதால் சென்ற மாதத்தைவிட சற்று குறைவாகவே மார்க்கெட்டுக்கு வந்துள்ளது. மறுபடியும் விலை உயரலாம் என எண்ணி இருப்பு வைத்திருக்கிறார்கள்.

சென்னை மாநிலத்தில் சில விற்பனைக் கூடங்களில் வேர்கடலை, பருப்பு, எண்ணெய் பிண்ணாக்கு முதலியவைகளின் ஜனவரி மாத விலைப்பட்டியல்.

(விலைகள் குவிண்டலுக்கு ரூ.)

வரிசை எண்	விவரங்கள்	தென்னாற்காடு	வட ஆற்காடு	கோவை	இராமநாதபுரம்	திருச்சி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	முழுக்கடலை	..	63—88	65—115	83—88	92—132
2.	பருப்பு	104—116	106—128	90—122	106—116	..
3.	எண்ணெய்	..	215—235	..	228—232	250—253
4.	பிண்ணாக்கு	..	..	.	45—47	47—52

விலை விபரம் :

ஏற்றுமதி கட்டுப்பாட்டினுல் எல்லா மாவட்டங்களிலும் வேர்க்கடலையும் அதன் உபபொருள்களும் சற்று விலை குறைந்ததாக காணப்பட்டுள்ளது.

(எள் : கொள்முதல் விற்பனை நிலவரம்).

வரிசை எண். (1)	மாவட்டம். (2)	ஆரம்ப இருப்பு. (3)	வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
1.	தென் ஆற்காடு	988	1,137	947	1,178
2.	வட ஆற்காடு	..	..	..	..

புகையிலை

கொள்முதல் விபரங்கள்

(எடையளவு குவிண்டலில்.)

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
1	பொள்ளாச்சி	100	130	80	150
2	கோயம்புத்தூர்	4,450	300	1,800	2,950
3	கோபி	550	300	200	650
4	உடுமலை	..	..	..	..
5	புளியம்பட்டி	4,000	..	1,000	3,000
6	பவானி	900	250	300	850
7	ஈரோடு	1,300	950	1,020	1,230
8	கொடுமுடி	400	670	680	390
9	சித்தோடு	980	610	730	860
10	காரமடை	1,500	..	400	1,100
11	பல்லடம்	9,326	..	673	8,653
12	தாராபுரம்	..	4,800	2,000	2,800
13	கோயம்புத்தூர்	600	300	250	650
14	பெருந்துறை	7	11	9	9

கோவை மாவட்டத்தில் பலதரப்பட்ட புகையிலையின் விலை விபரங்கள்

(விலை குவிண்டலுக்கு ரூ.)

வரிசை எண் (1)	விற்பனைக் கூடத்தின் பெயர் (2)	முதல் தரம் (3)	இரண்டாம் தரம் (4)	மூன்றும் தரம் (5)
(அ)	**சூயிங் மீனம்பாளையம்—**			
1	கோவை	300	195	140
2	கோபி	300	265	120
(ஆ)	**ஜாப்னு—**			
1	பல்லடம்	425	350	250
(இ)	**சூயிங் புகையிலை—**			
1	பொள்ளாச்சி	196	170	127
2	ஈரோடு	220	180	170
3	கோவை	200	150	100
(ஈ)	**செருட்—**			
1	ஈரோடு	210	180	130
2	கோபி	265	275	130
(உ)	**சூயிங் பிட்குபூர்டு**			
1	பல்லடம்	245	185	130

விலைப்போக்கு :

புகையிலை மார்க்கெட் தொடர்ந்து ஸ்திரமாக இருந்தது. பச்சையிலையாக பல்லடம், பொள்ளாச்சி, மதுரை முதலிய இடங்களிலிருந்து வியர்பாரிகள் வந்து வாங்கியதால் நல்ல கிராக்கி ஏற்பட்டது

Registered No. M-4646

© தமிழ்நாடு அரசாங்கம்
1965

அகில இந்திய பொருட்காட்சியில் (23—12—1964, 4—2—1965) விவசாய இலாகா அமைத்த மாதிரி வீட்டுக் காய்கறி தோட்டத்தின் ஒரு தோற்றம்

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.